DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX MLS

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons)
Sales Representative
416-648-9757
CENTURY 21 Innovative Realty Inc.

MORTGAGE
மோர்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா
2021 UTHAYAN உதயன்
கிக்கிக்கும் தமிழ் உலகின் உலகில்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

உதயம் 1323 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 13, 2021

நான்காவது அலை தொற்று வந்தாலும் தேர்தலை நடத்த முடியும் என்கிறார் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

கனடாவில் நான்காவது அலை தொற்று வந்தாலும் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்ததாக அவரது உதவியாளர்கள் சமூக ஊடகங்களில செய்திகளை பதிவிட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதேவேளை, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கத் தயாராகும் நிலையில் உள்ளார் என்றும் இது பற்றிய அறிவிப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமை வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் நான்காவது தொற்றுநோய் அலைக்கு தொடர்பான அச்சுறுத்தல் உள்ள நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவது ஏற்தல்ல என்று பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியும் புதிய ஜனநாயகக் கட்சியும் பிடிவாதமாக நிற்கும் நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவதில் எவ்வித சிரமமும் இருக்காது என்று பிரதமர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி தனது அலுவலகத்தில் உதயன் பிரதம ஆசிரியரைக் கௌரவித்தார்

கனடா உதயன் பத்திரிகை தனது 25 ஆண்டு கால ஊடகப் பணியை பூர்த்தி செய்தது தொடர்பாக கடந்த வாரம் வெளியிட்ட அதன் வெள்ளிவிழாச் சிறப்பிதழையும் உதயன் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கத்தையும் கௌரவிக்கும் முகமாக கனடா- ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தனது அலுவலகத்திற்கு திரு லோகேந்திரலிங்கத்தை கடந்த திங்கட்கிழமையன்று அழைத்திருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

சிறு விளம்பரங்கள் 4ம் பக்கத்தில்
Classified Ads On Page 4
'உதயன்' சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன். தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

தாமோர் நகை அடவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
உடனடியாக உங்கள் கைகளில் குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் நகைக்கும் பாதுகாப்பு அளிக்கும் நட்பான சேவைக்கு நிச்சயமாகவும் பிறரிடமிருந்து அமைந்துள்ள எமது தாமோர் அடவு மாளிகையை நாடுங்கள்
வசந்தக் துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East (3rd Fl) Mississauga, ON. L5A 1W7 905 272 1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX REALTRON TEAM

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

416.298.FOOT (3668)

MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400

Scarborough	Toronto/Downtown	North York	Mississauga	Brampton
201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3	800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2	306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6	110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7	201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

மூர்க்கமாய் நிற்கும் முதலாளித்துவத்திற்கு முன்பாக கனடாவின் ஜக்மீட் சிங்கின் கர்ச்சிப்பு

உலக முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடிக்கவென எழுந்து நின்ற சோசலிச நாடுகளான சீனாவும் ரஸ்யாவும் தணிந்து போய்விட, சிறிதளவு மூச்சுவிடும் நிலையில் உள்ள கியூபாவையும் பூச்சியத்திற்கு கொண்டு செல்ல முயலும் கபடத்தனமான செயற்பாடுகள் ஓங்கி நிற்கும் இந்த நாட்களில் கனடாவிலிருந்து ஒரு எழுச்சிக் குரல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆமாம்! இந்தியாவிலிருந்து கனடாவிற்கு குடியேறி, கல்வி கற்று சட்ட வல்லுனராகப் பட்டம் பெற்று தற்போது கனடாவின் மூன்றாவது தேசியக் கட்சியாக விளங்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக விளங்கும் ஜக்மீட் சிங் அவர்களது நேற்றைய சொல்வீச்சுக்கள் இன்றைய தினமும் அதிர்வலைகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளன.

சீக்கிய கனடியராக இன்னமும் தனது அடையாளத்தை புறக்கணிக்காமல், ஒரு தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை எட்டியிருக்கும் அவரது ஆற்றல் சாதாரணமாக கணிப்பிட முடியாத ஒன்று. மாகாண அரசின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று தொடர்ந்து தேசிய அரசியலில் கால் பதித்து தற்போது ஒரு கட்சியை வழி நடத்தும் பெரும-கனாக அவர் விளங்குகின்றார்.

கனடாவின் பொதுத்தேர்தல் இந்த வருடத்திற்குள் நடைபெறவுள்ளது என்ற செய்திகள் வெளியாகியுள்ள இந்த நாளில், ஜக்மீட் சிங் அவர்களது கட்சியின் தேர்தல் கால அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன. அவற்றின் சிலவற்றை கனடிய பாராம்பரியத்தை கொண்ட மாகாணங்களுக்குச் சென்று வெளிப்படையாக தெரிவிக்கும் ஜக்மீட் சிங் கனடிய மக்களுக்காக தமது கட்சி தயாரித்துள்ள பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

அவற்றில் ஒன்று, கனடாவில் உள்ள செல்வந்தர்களிடமிருந்தும் பெரிய நிறுவனங்களிடமிருந்தும் இன்னும் அதிகமான வரியை அறவிட்டு சாதாரண கனடியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவுள்ளதாக அவர் வெளிப்படையாக அறிவித்துள்ளார். உதாரணமாக கனடாவில் உள்ள பெருந்தேசிய காப்புறுதி நிறுவனங்களில் கையை வைக்கும் அளவிற்கு ஒரு திட்டத்தை ஜக்மீட் சிங் அறிவிக்கின்றார். தமது கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தைத் தந்தால், காப்புறுதி நிறுவனங்களிடம் உள்ள திட்டங்களை அரசாங்கமே பொறுப்பேற்கும் வகையில் மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளதாகவும் என்டிபி கட்சியின் தலைவராக அவர் வெளிப்படையாகவும் துணிச்சலுடனும் அறிவிக்கின்றார்.

'ஆனால் இந்த முதலாளித்துவ நிறுவனங்கள் அவ்வளவு எளிதாக தங்கள் இலாபமீட்டும் வாய்ப்புக்களை விட்டுக்கொடுக்கப் போகின்றனவா? என்ற கேள்வி தற்போது அனைவர் மனங்களிலும் எழுந்து நிற்கப்போகின்றன. அண்மையில் இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் விடுத்த அறிக்கையொன்றில் இந்த கோவிட்-19 தொற்றுக் காலத்தில் புதிதாகத் உருவெடுத்துள்ள செல்வந்தர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளார். இந்த செய்தியை அவர் நாட்டிற்கு பெருமை தரக்கூடிய ஒன்றாகவே வெளியிடுகின்றார். ஆனால் இதன் மறுபக்கத்தில் சாதாரண மக்களைச் சுரண்டியோ அன்றி அரசின் சொத்துக்களை சூறையாடியோ தான் புதிதாக செல்வந்தரகள் தோன்றியுள்ளார்கள் என்பதை அவர் மறைக்க முயலுகின்றார்.

இதைப்போலத்தான் கனடாவிலும் புதிதாக செல்வந்தர்கள் உருவாகியுள்ளார்கள். அரசாங்கத்தின் பல தேவைகளுக்கு அதிக இலாபம் தரும் ஒப்பந்தங்களை பெறும் பணம் படைத்தவர்கள் மேலும் மேலும் செல்வந்தர்கள் ஆகின்றார்கள்.

இவ்வாறாக முதலாளித்துவதத்திற்கு ஆதரவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உள்ள கனடாவில் பெரும் தேசிய நிறுவனங்களோடு எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் ஜக்மீட் சிங் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கனடிய பெரும் நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கான வரி அதிகரிக்கப்படும்

(கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி விபரங்களை என்டிபி என்னும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரும் சீக்கிய வம்சாவழி கனடிய அரசியல் தலைவருமாகிய ஜக்மீட் சிங் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

கனடாவின் நியுபவுண்ட்லாண்ட்-லாபடோர் மாகாணத்தின் சென் ஜோன்ஸ் நகரத்தில் சாதாரண கனடியர்கள் மத்தியில் அவர் உரையாற்றியோது நேற்று வியாழக்கிழமை இதனை வெளிப்படையாக அறிவித்தார்

ஆவர் அங்கு உரையாற்றுகையில் **Ready For Better** என்று பெயரிடப்பெற்ற தமது தேர்தல் கொள்கை அறிவிப்பில் சாதாரண கனடியர்களுக்கான பல பயனுள்ள திட்டங்கள் உள்ளடக்கப்பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் எமது கட்சி மத்தியில் ஆட்சி பீடம் ஏறினால் உடனடியாகவே சாதாரண கனடியர்கள் அதிக நன்மையை அடைவார்கள் என்றும் ஒட்டாவா பாராளுமன்றத்தின் அதிகாரம் தமது கட்சியிடம் கையளிக்கப்பட்டால், பரந்த அளவிலான கொள்கைகளை உள்ளடக்கியதும் உலகளாவிய மருந்தியல் திட்டத்தை உருவாக்க பில்லியன் கணக்கான டாலர்களை செலவழிக்க என்டிபி கட்சி உறுதியளித்துள்ளது, மேலும் என்டிபி அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாக சாதாரண கனேடியர்களுக்கும் ஏனையோர்க்கும் பொதுவாக, தனியார் நிறுவனங்களின் காப்புறுதித் திட்டங்களை இரத்து செய்து, பல் மற்றும் மனநல சுகாதார திட்டங்களை செயல்படுத்தும். மூத்தவர்கள் மற்றும் அங்கக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான திட்டத்துடன் "உடனடியாக" தொடங்கி அனைத்து கனேடியர்களுக்கும் என்டிபி கட்சியானது அடிப்படை வாழ்வாதார வருமானத்தை உருவாக்கும். என்று உறுதியளித்துள்ளார்

இவ்வாறான திட்டங்களுக்கு எவ்வாறு உங்கள் அரசாங்கம் நிதியைப் பெற்றுக்கொள்ளும் என்று செய்தியாளர்கள் என்டிபி தலைவரிடம் கேட்டபோது, கனடாவின் பெருநிறுவனங்கள் மற்றும் அதிக வருவாய் ஈட்டுபவர்களுக்கு வருமான வரியை அதிகரித்து அதன் மூலம் திறைசேரியில் நிதியை அதிகரித்து மக்களுக்கு பயனுள்ள திட்டங்களின் மூலம் உதவிடலாம் என்றும் மேலும் "பெரும் பணக்காரர்" என்ற வரையறையை விரிவுபடுத்துவதாகவும் தெரிவித்தார்

அர்ப்பணிப்பின் அடையாளமாக என்டிபி கட்சி நேற்று தெரிவித்த திட்டங்கள் போலவே - 2019 தேர்தல் பிரச்சாரத்தின்போது கட்சியின் மேடைகளில் தெரிவிக்கப்பட்டது என்றும் இதனால் என்டிபி கட்சியானது தமது தொகுதிகளில் 39 இடங்களில் 15 இடங்களை இழந்தது என்றும் ஆனால் கனேடியர்கள் தங்கள் கட்சியின் கொள்கைகளுக்கு மற்றொரு வாய்ப்பை வழங்குவார்கள் என்று நம்புகிறேன், என்றும் தெரிவித்தார்.

SWISS CHALET ROTISSERIE & GRILL

Now Hiring

We are looking for Full & Part Time Positions

General Manager, Kitchen Manager

Cook, kitchen Help & Food Prep

We are a place where success is created.

So, become part of

Canada's best tasting family tradition.

If you are:

Reliable, a Team Player who works well with people, & wants great hours.

Please Contact Us:

E-MAIL:
swiss1745@recipeunlimited.com

TELEPHONE:
(416) 251-4100 -2

திரிகரண சுத்தி – நோக்கு மர்மம்

அற்புதமான பயிற்சி முறை

சுத்த வெளி சபை சார்பாக 10 நாட்கள்

Yoga Guruji

A N Dhanasekaran ayya

அவர்களால்

குருவின் திருவருளால் நடத்தப் பட உள்ளது

தேதி: ஆகஸ்ட் 15, இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது

கனடா நேரப்படி:

காலை 8:30 மணி, மாலை 7:30

தேதி: 16.08.2021 முதல் 25.08.2021 வரை

இந்திய நேரப்படி

காலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை

மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை

Zoom Id : 669 750 5000

Pwd : 223 138

அன்பர்கள் ஏதேனும் ஒரு வேளையில் கலந்து கொள்ளலாம். முடிந்தவர்கள் இருவேளையிலும் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

வேலைக்கு ஆட்கள் தேவை

மார்க்கத்தில் அமைந்துள்ள சூரிய மின்சக்தி உருவாக்கும் தொழில்நுட்ப நிறுவனம் எங்கள் தொழில் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற சுய ஊக்கம் மற்றும் ஆர்வமுள்ளவர்களைத் தேடுகிறது. தெரிவு செய்யப்பட்டவர்கள் எங்கள் நிறுவல் மற்றும் பொறியியல் குழுக்களுடன் இணைந்து சூரிய மின்சக்தி உருவாக்கும், EV சார்ஜர்கள், மற்றும் பிற உபகரணங்களை வீடு, வணிக நிறுவனங்களில் பாதுகாப்பாகவும் செவ்வனேவும் நிறுவி பராமரிக்க வேண்டும்.

எங்கள் குழு உறுப்பினர்கள் சூரிய மின்சக்தி அமைப்புகள் மற்றும் பிற உபகரணங்களை பாதுகாப்பு நடைமுறையும், தரங்களையும் கடைப்பிடித்து திற-மையாக சரியான நேரத்தில் நிறுவி பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிப்பர்.

பின்வரும் பதவிகளுக்கு முழுநேர, பகுதிநேர மற்றும் ஒப்பந்தத்திற்கு வேலை செய்யும் ஆட்கள் தேவை:

1. Solar Panel installers
2. Project coordinator
3. Field Technician
4. Electrician
5. HVAC Technicians

உங்களிடம் திறமையுடன் வெற்றிபெறும் மனப்பான்மை இருப்பதாக நீங்கள் கருதினால் உங்களது விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாக admin@newdawn-es.com க்கு அனுப்பி வையுங்கள்.

மேல் கூறிய பதவிகளைப் பற்றி கேள்விகள் இருந்தால் எங்களை (416) 855-9377 இல் தொடர்பு கொள்ளவும்.

சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

வேலை வாய்ப்பு

Kitchen help needed.

Call:
416-827-7772
for more details

வீடு மனை விற்பனை

இந்தியா, சென்னை நகருக்கு அருகில், பட்டா அங்கீகாரம் பெற்ற வீடு கட்டுவதற்கு உகந்த காலி மனை விற்பனைக்கு உள்ளது.

அனுகவும்: ரஹ்மான் அலி
647-581-2814

அலுவலக வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடன்-டியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகி-யன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
416 732 1608

LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

RANJAN: (416) 464-2415

Basement for Rent

Morningside Ave & Morningview Trail சந்திப்புக்கு அருகில்
2 bedroom basement with separate entrance வாடகைக்கு உண்டு.
Close to all amenities. No smoking & no pets.
A couple or small family preferred.
Available Immediately. Rent plus 30% Utilities.
Call: (416) 560-0327

Basement வேலைக்கு ஆட்கள் தேவை

Basement திருத்த வேலைகள் செய்வதற்கு தகுந்த ஆட்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
416 618 4584

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள வீட்டு மரத்தளபாடங்கள் விற்பனைக்கு உள்ளன.
Complete Bed Room Set and Dinning Table with Chairs

தொடர்புகளுக்கு:-
647 286 2340

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

பிள்ளை பராமரிப்பாளர் தேவை

பிக்கரிங் நகரில் வசிக்கும் நான்கு பிள்ளைகளை வீட்டிற்கு வந்து கவனித்துப் பராமரிக்க, ஒரு பெண்மணி தேவை. வாகனம் ஓட்டக் கூடியவராக இருத்தல்வேண்டும். அத்துடன் சமையல் செய்யக்கூடியவராகவும், ஓரளவு ஆங்கிலம் பேசக் கூடியவரா-கவும் இருத்தல் அவசியம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- **647 532 8262**

பகுதி நேர வேலை வாய்ப்பு

DOWN TOWN TORONTO இல் பகுதி நேர **CLEANING** வேலைக்கு ஒருவர் தேவை.
6.00 PM-9.00 PM

தொடர்புகளுக்கு:-
647 286 2340

வேலை வாய்ப்பு

Looking for part time or full time workers.
Job available in ESSO Gas Station in AJAX.

Call: Vijay
(416) 452-5567
for more details

வேலை வாய்ப்பு

Kitchen helper/ Dishwasher wanted.

Part time Waitstaff.

South Indian cook full time and part time.

Markham & Scarborough location

Call: AMAR 416-988-9518

கனடிய செய்திகள்
Canadian News

தனது பிறப்பிலிருந்தே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருந்தவர் அமரர் கலாநிதி வசந்தகுமார் அவர்கள்

NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிர்வாகத்தினர் நடத்திய அஞ்சலி நிகழ்வில் வி. துரைராஜா புகழாரம்

"கனடாவில் அணமையில் எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற அமரர் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்கள் பல்வேறு நற்பணபுகள் நிறைந்தவர். அவரது துறை சார்ந்த அறிவு மற்றும் பட்டங்கள் ஆகியவற்றை ஒரு புறத்தே வைத்து விட்டு மிகுந்த மனிதநேயம் கொண்டவராக அவர் தனது கனடிய வாழ்வை மேற்கொண்டார். எப்போதும் யாருக்காவது உதவிடவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியுமே அவரது எண்ணங்களின் ஓட்டம் இருந்தது.

மறைந்த நண்பர் தாம் வசந்தகுமார் அவர்கள் விருதுகளையோ அன்றி பாராட்டுக்களையோ எப்போதும் விரும்பியது இல்லை. தன்னிடம் ஒப்படைக்கின்ற பதவிகள் எவையாக இருந்தாலும் அவற்றை மிகவும் பொறுப்புணர்வோடு ஏற்று சேவைகளையும் செய்து, அதன் மூலம் முன்னேற்றங்களையும் அடைவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். மாறாக இந்த பதவி மூலம் தான் எந்த இலாபத்தைப் பெறலாம் என்றெல்லாம் அவர் ஒருபோதும் சிந்தித்தது இல்லை".

இவ்வாறு தெரிவித்தார் சமூக சேவையாளரும் ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினருமான திரு விநாசித்தம்பி துரைராஜா.

கடந்த செவ்வாய்க்கிழமை10ம் திகதி மாலை ஸ்காபுறோவில் AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY மண்டபத்தில் மேற்படி கல்லூரி நிர்வாகிகளான திரு சாம் மணியன் மற்றும் திருமதி ரதி மணியன் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்ட மறைந்த பொறியியற்கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் ஞாபகார்த்த நிகழ்வில் அஞ்சலியுரையாற்றிய போதே திரு துரைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்றைய தினம் NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிர்வாகத்தினர் கல்லூரி சார்பில் நடத்திய அமரர் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் உருவப் படத்திறப்பு நிகழ்வு மற்றும் அஞ்சலி உரைகள் ஆகியன இடம்பெற்றன. அழைக்கப்பெற்ற சில நண்பர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் மத்தியில் மிகவும் உணர்வுபூர்வமாக மேற்படி நிகழ்வு நடத்தப்பெற்றது.

NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிறுவனத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக கல்வித்துறை இயக்குனராகப் பணியாற்றி மேற்படி கல்லூரிக்கு பல முன்னேற்றங்களை பெற்றுத் தந்த கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் உருவப் படத்திறப்பு நிகழ்வை நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். அன்னாரது உருவப் படத்தை கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் புதல்வி திருமதி வைதேகி திறந்து வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலி நிகழ்ச்சியை முதலில் NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிறுவனத்தின் முதல்வர் திருமதி ரதி மணியன் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் முதலில் NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிறுவனத்தின் வளர்ச்சியில் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களுக்கு நிறையவே பங்குண்டு எனவும், அவரது நிர்வாகத் திறமை, மற்றும் பொறுமையாக விடயங்களை கவனித்தல், கற்பித்தல் திறமைகள் போன்றவை பற்றி சிறப்பாக உரையாற்றினார். ஆரம்பத்தில் ஒரு சில மருந்தகத் துறை சார்ந்த கற்கை நெறிகளை மட்டுமே கொண்டிருந்த தமது NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிறுவனம், அமரர் தாம் வசந்தகுமார் அவர்களின் வருகைக்கு பின்னர் பல தொழில் சார்ந்து கற்கை நெறிகளையும் கல்லூரியில் இணைத்துக்கொள்ள முடிந்தது என்றும் இதற்காக உரிய அரச திணைக்களங்களிலிருந்து அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவர் கடுமையாக உழைத்தார் என்றும் எனவே அவரது இழப்பு தனிப்பட்ட ரீதியில் தமக்கும் தம் கணவருக்கும் மிகுந்த வேதனையைத் தருவதாகவும் அத்துடன் தமது NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY கல்லூரியின் வளர்ச்சி மிகுந்த பின்னடைவை ஏற்படுத்துமோ என்று தாம் கவலைப் படுவதாகவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் தனது உரையில்.

"நான் 1990ம் ஆண்டு கனடாவிற்கு வந்தபோது தற்போது அமரராகிவிட்ட கலாநிதி தாம் வசந்தகுமார் பல மேடைகளில் தோன்றி எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக காத்திரமான உரைகளை ஆற்றியதை கண்டு வியந்தேன். ஆனால் காலப்போக்கில் அவரது உயரிய சமூகப் பங்களிப்பைக் கண்டு அவரோடு நட்புக் கொண்டேன். கனடாவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியில மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கிய தாம் வசந்த குமார் அவர்கள் பின்னர் கொம்பியுடெக் கல்லூரியை ஆரம்பித்து பல இளைஞர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி பயிலும் வாய்ப்பை பெற்றுக்கொடுத்து அவர்களுக்கு தகுந்த பதவிகளையும் முக்கிய நிறுவனங்களில் பெற்றுக் கொடுத்தார்" என்று கூறினார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் அன்றைய அஞ்சலி நிகழ்வானது கலாநிதி தாம் வசந்தகுமார் அவரது மறைவிற்குப் பின்னர் குடும்ப நிகழ்வுகளுக்குப் பின்னர் இடம்பெற்ற சமூகம் சார்ந்த ஒரு அஞ்சலி நிகழ்வாக இதை நடத்திய NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிறுவனத்திற்கும் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் புதல்வி திருமதி வைதேகி தனது உரையில்" எனது அப்பா அதிகம் செல்வத்தை சேர்க்க எப்போதும் ஆசைப்பட்டதே இல்லை. நாம் வாழும் வரை சமூகத்திற்கும் மற்றவர்களுக்கும் உதவிகளைச செய்து வாழ வேண்டும் என்று விரும்பியவர். எம்மை சரியான வழியில் கூட்டிச் சென்று தகுந்த கல்வியையும் அறிவையும் ஈட்டித் தந்து தகுந்த துணைகளையும் தேடித்தந்துள்ளார்" என்று கூறினார்.

செய்தியும் படங்களும்: சத்தியன்

The Re-opening Ceremony of Netwyn.Place

Netwyn.Place நிறுவனத்தின் மீள் திறப்பு விழா வைபவம்

The Re-opening Ceremony of Netwyn.Place, took place yesterday at 10, Thornmount Drive in Scarborough. It was a graceful event and the President of the Company Mr. Kula Sellathurai invited only a very limited number of Friends and his employees.

எமது நண்பரும் கனடா வாழ் தமிழ் பேசும் வர்த்தகப் பெருமக்களில் வெற்றிகரமாக இயங்கி வருபவருமான திரு. குலா செல்லத்துரையின் Netwyn.Place நிறுவனத்தின் மீள் திறப்பு விழா வைபவம் 10 Thornmount Drive in Scarborough. என்னும் விலாசத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

கோவிட்-19 காரணமான வர்த்தகப் பின்னடைவிற்குப் பின்னர் இந்த நிறுவனம் மீண்டும் திறக்கப்பெற்றுள்ளது.

குறைந்த எண்ணிக்கையுடைய நண்பர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

உதயன் பிரதம ஆசிரியர் அங்கு தனது பாரியாருடன் கலந்து கொண்டார். மற்றும் திரு. கணேசன் சுகுமார் உட்பட பல தமிழ்பேசும் வர்த்தக நண்பர்களும் கலந்து கொண்டனர்.

செய்தியும் படங்களும்: சத்தியன்

திரிபுறும் வைரசும் திணறும் இலங்கைத் தீவும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

புராணங்களில் வரும் அசுரர்கள் கொல்லப்பட்டுகையில் அல்லது தோற்கடிக்கப்படுகையில் தங்கள் தோற்றங்களை மாற்றிக் கொள்வார்கள். அப்படித்தான் சூரன் சேவலும் மயிலுமாக மாறினார். இப்பொழுது வைரசும் மனிதகுலத்தின் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக திரிபடைந்து கொண்டே போகிறது. தமிழ் மக்கள் மத்தியில் முன்பு டெல்டா என்ற பெயரில் ஒரு ரொபி இருந்தது. குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமானமலிவான ஒரு ரொபி அது. இப்பொழுது அதே பெயரில் ஒரு வைரஸ் வந்திருக்கிறது. ஆனால் டெல்டா, பீட்டா என்பவற்றுக்கு மேலதிகமாக புதுவித திரிபுபெற்ற வைரசினால் அண்மையில் கொலம்பியாவில் 8பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தான்லாகூரில் கொரோனா நோயாளர்களின் இரத்த மாதிரிகளை பரிசோதித்தபோது "எப்சிலன்" என்ற புதிய வைரஸ்திரிபு கண்டறியப்பட்டுள்ளது.ஏனைய வைரசுகளைப் போன்று தடுப்பூசிகளால் "எப்சிலன்" திரிபை கட்டுப்படுத்தமுடியாது என்று நிபுணர்கள் சுட்டிகாட்டுகின்றனர்.

அதாவது கொரோனா வைரஸ் தனக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுத்து புதிய திரிபுகளை பெற்று வருகிறது. புராணகால அரக்கர்கள் புரிந்த மாய போரைப் போல.

இலங்கைத் தீவில் வைரஸ் தாக்கத்தால் இதுவரையிலும் இறந்தோரின் மொத்தத் தொகை 5000 ஐயும் தாண்டி விட்டது. முதலாவது அலையில் 13 பேரும், இரண்டாவது அலையில் 596 பேரும் மூன்றாவது அலையில் 4212க்கு அதிகமானவர்களும் இறந்துள்ளனர். மூன்றாவது அலையில் இறப்பு விகிதம் நான்குமடங்காக அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த புதன்கிழமை வரையிலுமான ஏழு நாட்களில் இறப்பு விகிதம் மிக உயர்வாகக காணப்பட்டுள்ளது. ஏழுநாட்களுக்குமான சராசரி இறப்பு விகிதம் 3.88. இவை உத்தியோகபூர்வ தகவல்கள். இந்தத் தொகை, இதை விட அதிகமாக இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் உண்டு.

"சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த மூன்றாவது தொற்றலை இந்த ஆண்டின் இறுதிக்குள் 20 ஆயிரம் உயிர்களை எடுத்து விடும்" என்று சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரவீந்திர ராணன் எலிய கூறியிருக்கிறார். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 3000 பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள். இது ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சி காலகட்டத்தில் மாதாந்தம் கொல்லப்பட்டவர்களின் தொகையை விட அதிகமானது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

"நாட்டில் கொவிட் பரவல் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குச் சென்றுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் வைத்திய சாலைகளில் மட்டுமன்றி தகனச்சாலைகளிலும் பெரும் நெருக்கடி நிலைமையைச் சந்திக்க நேரிடும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரி வித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் நாளாந்தம் வெளியாகும் புள்ளிவிபரத் தகவல்கள் குறித்து சில பிரச்சினைகள் உள்ளன. எவ்வாறாயினும் தற்போது பதிவாகும் கொவிட் நோயாளர்களின் அளவைப் பார்க்கும் போது இதனை முகாமைத்துவம் செய்வது கஷ்டமாகும். நாங்கள் இப்போது தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கோ அல்லது இடைத் தங்கல் நிலையங்களுக்கோ அனுப்பும் நடவடிக்கைகளையே செய்கின்றோம். ஆனால் அனைத்து தொற்றாளர்களையும் தேடிப் போகவும் முடியாத நிலைமையே காணப்படுகின்றது. தற்போது கொவிட் நோயாளர்களை தகனம் செய்யும் தகனச் சாலைகளில் சுகாதார பரிசோதகர்கள் பணியாற்றுகின்றனர். சில இடங்களில் விடியவிடிய அவர்கள் உடல்களைத் தகனம் செய்கின்றனர். இந்த நிலைமை தொடருமாக இருந்தால் வைத்திய சாலைகளையோ, சிகிச்சை நிலையங்களையோ அமைக்காது தகனச் சாலைகளையே அமைக்க வேண்டிய நிலை வராம்" என்றுமவர் கூறியுள்ளார்.

அதேசமயம் கோட்டாபய அரசாங்கத்தை உருவாக்குவதற்காக பாடுபட்டவர்களில் ஒருவரும் இப்பொழுது அரசாங்கத்தை கடுமையாக விமர்சிப்பவருமாகிய ஆனந்த முருத்தெட்டுவ தேரர் கூறுகிறார் இந்த நிலைமை நீடித்தால் பேக்கரிகளில் உபயோகிக்கப்படும் பாண் போறணைகளில் பிணங்களை தகனம் செய்ய வேண்டி வரலாம் என்று.

தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கைகள் எவ்வளவுதான் வேகப்படுத்தினாலும் அவை அவற்றின் இலக்குகளை அடைவதற்கு ஆக குறைந்தது 2022ஆம் ஆண்டில் முன்பகுதிவரை செல்லும் என்றும் மருத்துவர் ரணன் எலிய கூறுகிறார். இதன் மூலம் தொற்றுப் பரவும் வேகத்தை போதுமான அளவுக்கு தடுக்கக் கூடியதாக இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். இந்த நிலைமை கிட்டத்தட்ட இஸ்ரேலிலும் காணப்பட்டது. உலகில் அதிக விகிதம் பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்ட நாடுகளில் அதுவும் ஒன்று. ஆனால் மறுபடியும் இப்பொழுது அங்கு இறப்பு விகிதம் அதிகரிக்கிறது. இலங்கைத் தீவில் ஓகஸ்ட் நான்காம் திகதியிலிருந்து இறப்புவீதம் நாள் ஒன்றுக்கு 90க்கும் அதிகமாக காணப்படுகிறது. இது மேலும் சிறிது காலத்துக்கு தொடரலாம் என்றுமவர் கூறுகிறார்.

உலகில் இதுவரையிலும் டெல்டா திரிபை பெருமளவுக்கு முறியடித்த நாடாக சீனாவைதான் கூறமுடியும். குவாங்டோங் மகாணத்தில் ஆறே வாரங்களில் அவர்கள் நோய் முறியடிப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றதாகவும் ராணன் எலிய கூறுகிறார். மேற்படி மாகாணத்தில் பெருமெடுப்பிலான பிசிஆர் சோதனைகளின் மூலமும் தனிமைப்படுத்தல்களின் மூலமுமே டெல்டா திரிபு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் இக்காலகட்டத்தில் தடுப்புஊசி ஏற்றும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன என்றுமவர் கூறுகிறார். எனவே சீனாவின் குவாங்டோங் மாகாணத்தில் பெற்ற வெற்றி என்பது தடுப்பூசி மூலம் பெறப்பட்ட வெற்றி அல்ல என்றுமவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் பிசிஆர் பரிசோதனைகளை ஒப்பீட்டளவில் குறைத்திருப்பதோடு தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கையை ஏறக்குறைய ஒரு படைநடவடிக்கை போல முன்னெடுத்து வருகிறது. உலகப்பொது புள்ளிவிபரங்களின்படி வைரஸ் தொற்றினால் இறப்பவர்களின் எண்ணிக்கை ஐந்து விகிதம் என்றும் தடுப்பூசி போடுவதன் மூலம் இறப்பு விகிதத்தை 1.5 தொடக்கம் 1.3 வரையிலும் குறைக்க முடிந்திருக்கிறது என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இதுவிடயத்தில் மருத்துவ துறையினருக்கும் படைத் தரப்புக்கும் இடையில் பொருத்தமான ஒருங்கிணைப்பு இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றுவதற்காக மக்கள் மிகநீண்ட வரிசையில் காத்து நிற்கிறார்கள். வெயில் தாகம் என்பவற்றின் மத்தியில் முதியவர்களை இவ்வாறு நீண்டநேரம் நீண்ட வரிசைகளில் காத்திருக்க செய்யும் நடவடிக்கையானது தொற்று வீதத்தை அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இரண்டாவது கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்ட பொழுது நல்லூர் திருநெல்வேலி போன்ற இடங்களில் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் படங்களோடு கூடிய விமர்சனங்களை முன்வைத்தார்கள். அதேபோல டுவிட்டரில் ஒரு சிங்கள ஊடகவியலாளர் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த கைகாவல என்ற இடத்தில் சில கிலோமீட்டர் தொலைவிற்கு மக்கள் நீண்ட வரிசையில் தடுப்பூசி பெறக் காத்திருக்கும் காணொளி ஒன்றை பதிவிட்டிருந்தார்.

அரசாங்கம் தடுப்பூசியை விரிவாக ஏற்றிமுடிப்பதன் மூலம் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரலாம் என்று நம்புகிறது. ஆனால் ராவணன் எலிய போன்றவர்கள் கூறுகிறார்கள் எவ்வளவு வேகமாக முயற்சித்தாலும் எவ்வளவு ராணுவத்தனமாக முன்னெடுத்தாகும் நாடு முழுவதும் தடுப்பு ஊசி ஏற்றி முடிப்பதற்கு 2002ஆம் ஆண்டின் முற்பகுதி வரை செல்லலாம் என்று. இந்த இடைப்பட்ட காலகட்டத்துக்குள் வைரஸ் தொற்றும் சாவு வீதமும் அதிகரிக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நாட்டில் இப்போது டெல்டா திரிபு வைரசால் இறப்பவர் தொகை மட்டும் உயரவில்லை. விலைவாசியும் வைரஸ் தொற்றுக்கு நேர் விகிதமாக ஏறிக்கொண்டே போகிறது. சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலைமைகளோடு ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாக பொதுவாக அவதானிக்கப்பட்டுள்ளது. அங்கர் பால்மா விலையை உயர்த்தும்படி வணிகர்கள் கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்த இழுபறிக்குள் சிலவேளைகளில் அரசாங்கம் இறங்கி வந்தால் பால் மாக்களின் விலை அதிகரிக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் வணிகர்கள் பால்மாவை பதுக்கி விட்டார்கள்.
சமையல் எரிவாயுவின் நிலையும் அப்படித்தான். சீனி மட்டும் மைசூர் பருப்பு போன்றவற்றின் மொத்த விற்பனை விலை கடந்த வாரம் பத்து ரூபாய்களால் அதிகரித்திருக்கிறது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாட்டின் சில நகரங்களில் சனங்கள் நீண்ட வரிசைகளில் காணப்படுகிறார்கள். லா.ஃப் எரிவாயு விநியோகம் நீண்ட நாட்களாக நிறுத்தப்பட்டதால் லிட்ரோ எரிவாயுவைப் பெறுவதற்காக சனங்கள் மாத்தறை, களுத்துறை, ஹொரணை ஆகிய பகுதிகளில் எரிவாயுவை பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்தனர். ஒருபுறம் பொருட்களை வாங்குவதற்காக நீண்ட வரிசை. இன்னொருபுறம் தடுப்பூசி பெறுவதற்காக மிக நீண்ட வரிசை.

அரசாங்கத்தால் டெல்டா திரிபையும் கட்டுப்படுத்த முடியவில்லை விலையேற்றத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. எனினும் தமிழகத்தில் டெல்டா திரிபு ஏற்படுத்திய படுபயங்கரமான ஒரு நிலைமை இப்பொழுதுவரை இலங்கைத்தீவில் ஏற்படவில்லை என்று துறைசார் நிபுணர்கள் சிலர்தெரிவிக்கிறார்கள். பெயர்குறிப்பிட விரும்பாத ஒரு மருத்துவர் கூறினார் மேல் மாகாணத்தோடு ஒப்பிடுகையில் தமிழ்ப் பகுதிகளில் நிலைமை ஸ்திரமாக இருக்கிறது. அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. யுத்த காலங்களில் எல்லாப் பயங்கரமான நிச்சயமின்மைகளின் மத்தியிலும் வேலை செய்த ஒரு மருத்துவத்துறைபி பாரம்பரியம் தமிழ் பகுதிகளுக்கு உண்டு அந்த அனுபவம் இப்படிப்பட்ட நிலைமைகளை எதிர்கொள்ள உதவும் என்று.

இருக்கலாம். அதேசமயம், டெல்லியைச் சேர்ந்த மருத்துவர் உமா வைத்தியநாதன் கூறுவதுபோல "இந்த உலகில் எந்த ஒரு நாடும் படுக்கைகளை ஒக்சிசன் வென்டிலேட்டர்களை தீவிர சிகிச்சை விடுதிகளை அதிகரிப்பதன் மூலம் கட்டுப்படுத்த இயலுமாகஇருக்கும் என்றில்லை. இது தற்காலிகமான சாத்தியமற்ற அதிகம் செலவுகூடிய ஒரு தீர்வு. சுகாதார பராமரிப்பு உட்கட்டமைப்புத்தான் அதற்குரிய பதில் என்றால் வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகளில் சாவுக்கேதான அதிகரித்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்க முடியாது. விரைவான செலவு குறைந்த நீண்டு நிலைத்திருக்கக்கூடிய தீர்வு எதுவென்றால் அது சமூக இடைவெளியை பேணுவதும், மாஸ் அணிவதும், நோய்த்தொற்றை தடுக்கும் மிகவும் உயர் தரத்திலான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதுதான்". ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருப்பது வீதி விபத்துக்களை தடுப்பதற்காகவல்ல.மாறாக கவனமாக வாகனம் செலுத்துவதன் மூலம்தான் வீதி விபத்தை தடுக்கலாம்.மக்களுடைய நடத்தைதான் பெருந் தொற்றுநோயின் போக்கை தீர்மானிக்கிறது".

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதியை வழக்கிலிருந்து காப்பாற்றும் முயற்சிக்கு எதிர்ப்பு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



இலங்கையில் குற்றங்களைச் செய்தலும் அல்லது குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி அதிலிருந்து ஆட்சி அதிகாரத்தின் ஆதரவுடன் அதிலிருந்து விடுவிக்கப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில், அதையே ஒரு சாக்காகக் கொண்டு ஆட்கடத்தல், காணாமல் ஆக்கப்படுதல், எதற்கும் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை என்கிற நிலை என்பதெல்லாம ஏற்றுக் கொள்ளப்பட்ட வழமையான ஒன்றாகவே இருந்தது. அதிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மிகவும் உயர்மட்டத்தைச் சேர்ந்த்வர் என்றால் கேட்கவே வேண்டாம்.

அனைத்துமே "கொன்றால் பாவம் தின்றால் போச்சு" கதை தான்.

இப்போது நாட்டின் கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொடவை குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்றும் முயற்சி நடைபெறுகிறது, அது கைவிடப்பட வேண்டும் எனும் கோரிக்கை வலுத்து வருகின்றது.

இறுதி யுத்தம் நடைபெற்ற 2008-2009 ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்தி அச்சுறுத்தி கப்பம் பெற்று மற்றும் காணாமல் போக செய்த, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை நீக்க வேண்டாமென குரல்கள் எழுந்துள்ளன.

குறித்த அந்த 11 பேரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழு சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இழுத்தடிக்கப்பட்டு 13 வருட விசாரணையின் பின்னர், பிரதம நீதியரசரின் ஆலோசனைக்கு அமைய, மூன்று பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு குற்றப்பத்திரிகை மீதான விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில் குற்றச்சாட்டுகளை திரும்பப் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

"குற்றச்சாட்டுகளை விரைவாக மீளப் பெறுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாராபட்சம் காட்டப்படுகிறது, இது ஒரு அநீதியான செயல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் செய்யும் ஒரு நடவடிக்கை, அது நிறுத்தபப்ட வேண்டும்" என்று கடத்தப்பட்டு காணாமல் போன 11 பேரின் பெற்றோர் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்னவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

667 குற்றச்சாட்டுகள், 126 சாட்சிகள் மற்றும் 64 வழக்குக் கோப்புகளுடன், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த குமார ஜயதேவ கரன்னகொடவிற்கு எதிரான தொடரப்பட்ட வழக்கை தொடர்ந்து கொண்டு நடத்த முடியாது என சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

சம்பா ஜானகி ராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க உள்ளிட்ட நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மூத்த அரச சட்டத்தரணி ஜனக பண்டார இதனை தெரிவித்தார்.

கஸ்தூரி ஆராச்சிலாகே ஜோன் ரீட், அந்தனி கஸ்தூரி ஆராச்சி, ராஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், மொஹமட் சஜித், திலகேஸ்வரம் ராமலிங்கம், ஜமால்டின் டிலான், அமலன் லியோன், ரோஷன் லியோன், கனகராஜா ஜெகன் மற்றும் மொஹமட் அலி அன்வர் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களை விடுவிக்க கடற்படை அதிகாரிகள் அவர்களது பெற்றோரிடம் கப்பம் பெற்றுள்ளது விசாரணையில் தெரியவந்தது. குற்றப்புலனாய்வு பிரிவின் தகவல்களுக்கு அமைய கடத்தப்பட்டவர்களில் பலர் கொழும்பிலும் ஏனையவர்கள் கடற்படையின் திருகோணமலை கன்சைட் முகாமிலும் கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளாக இருந்த லெப்டினன் கமாண்டர் சம்பத் முனசிங்க, கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான லெப்டினன் கமாண்டர் டீ.கே.பி. தஸநாயக்க, புலனாய்வுப் பிரிவு கமாண்டர் சுமித் ரணசிங்க, கடற்படை கப்டன் லக்ஷ்மன் உதயகுமாரமற்றும் புலனாய்வு அதிகாரிகளான லலித் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிட இஹலகெதர தர்மதாஸ, ராஜபக்ச பத்திரணலாகே கித்சிறி, கஸ்தூரிகே காமினி, முத்துவாஹென்நெதி அருண துஷார மெண்டிஸ் மற்றும் முன்னாள் லெப்தினன் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மற்றும் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

"13 வருடங்களாக பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்த நாம் இந்த 14 குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டு நியாயம் நிலைநாட்டப்படும் என நம்புகிறோம்" எனக் கூறியுள்ள காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரின் பெற்றோர்கள், இந்த விடயமானது இயற்கையின் கோட்பாடுகளுக்கும் நீதிக்கும் எதிரானது என்பதால், ஆதரவற்ற பாதிக்கப்பட்ட பெற்றோருக்காக, வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை மீளப் பெறுவதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்னவிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மூன்று பேரின் தாய்மார் தமது பிள்ளைகளை இழந்த நிலையில், அந்த துக்கம் மற்றும் மன வேதனையின் காரணமாக உயிரிழந்ததாக சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதியை கைது செய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவு ஒருமுறை முயற்சித்த நிலையில், தன்னை கைது செய்வதை தடுக்கும் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட தாக்கல் செய்த அடிப்படை உரிமைய மீறல் மனுவை ஆராய்ந்த நீதிபதிகளான புவனேக அலுவிகார, விஜித் கே.மலல்கொட மற்றும் ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதிமன்றம், அவரை கைது செய்வதைத் தடுக்கும் தடை உத்தரவு பிறப்பித்ததாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வசந்த கரன்னாகொட சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தனது கட்சிக்காரரர் பதவியில் இருந்த காலத்தில் யுத்தத்தின் வெற்றிக்கு பாரிய பங்களிப்பை வழங்கியதாக சுட்டிக்காட்டினார்.

குற்றம் சாட்டப்பட்ட கரன்னகொட மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை எனக் குறிப்பிட்ட சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஐக்கிய நாடுகள் சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சில அரசியல்வாதிகள் மீது குற்றம் சாட்டியதோடு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியனவும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

போரின் போது, தனது கட்சிக்காரரர் விரும்பிய ஒருவரை அவர் கடத்தவோ அல்லது கொலை செய்யவோ வாய்ப்புள்ளது எனவும், அந்த நாட்களில் போர் வலையத்தில் அந்த போர் வீரர்களிடம் யாரும் கேள்வி கேட்கவில்லை எனவும், எனினும் இன்றைய சூழ்நிலையில் எவரும் அவ்வாறு செய்ய முடியாது எனவும், குற்றவியல் குற்றச்சாட்டுகளில் "போர் வீரன்" கைது

செய்யப்படுவதை "தேசத்திற்கு எதிரான குற்றம்" என உச்ச நீதிமன்றம் கருத வேண்டுமெனவும் சட்டத்தரணி வலியுறுத்தியிருந்தார்.

உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, முன்னாள் கடற்படைத் தளபதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தனது ஆட்சேபனைகளை எவ்வித தடையும் இன்றி முன்வைக்க அனுமதித்ததோடு, முன்னாள் கடற்படை தளபதியை கைது செய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பித்ததோடு, அது இறுதி உத்தரவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏகமனதாக தீர்ப்பை அறிவித்த மூன்று நீதிபதிகள் கொண்ட குழு, மனுதாரரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா அளித்த சமர்ப்பிப்புகளையும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட, கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

எனினும் வசந்த கரன்னாகொட உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்க அவசரமாக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக, குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையானதாக கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரின் பெற்றோர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொட தமது பிள்ளைகளை கடத்தி கொலை செய்தமைத் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அதனை மூடிமறைக்க முயன்றதாக அவர்கள் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதிவாதியான கரன்னாகொட சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, மனு மீதான விசாரணை நிறைவு பெறும் வரை, அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என்ற உத்தரவை பெற்றுள்ளார்.

இந்த மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அன்றைய தினத்தில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கவுள்ளதாகவும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டத்தின் நிர்வாக பணிப்பாளர், யஸ்மின் சூகா, "முற்றாகப் பாராமுகம் காட்டும் இலங்கைக் கடற்படை" என்ற பெயரில் கடந்த 2019ஆம் ஆண்டு அறிக்கையொன்றை வெளியிட்டதோடு, திருகோணமலை 11 பேர் கடத்தல் விவகாரம் குறித்த வழக்கு விசாரணைகள் இலங்கை நீதித்துறையின் மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால் தற்போது அதுவே தோல்வியின் அடையாளமா மாறியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மேலும், இவ்வழக்கில் திருகோணமலை கடற்படை புலனாய்வுப் பிரிவின் கட்டளைப்பீட பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட மூத்த கடற்படை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பும், பதவியுயர்வும் வழங்கப்பட்டிருப்பது குறித்தும் அவர் கவலை வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் ஆட்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டது குறித்து ஐ நா உட்பட பன்னாட்டு அமைப்புகள் கவலை வெளியிட்டிருந்தன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

நுண்ணுயிர் எதிர் – கொரோனா நூல் வெளியீட்டு விழா – சென்னையில்

இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியீடான மட்டகளப்பைச் சேர்ந்த உளநல ஆலோசகர் கே. நித்தியானந்தன் எழுதிய நுண்ணுயிர் எதிரி - கொரோனா நூல் வெளியீட்டு விழா சென்னையில் இராயப்பேட்டை NMS இல்லத்தில் 08/08/2021 அன்று சிறப்பாக நடைபெற்றது.

உரத்த சிந்தனை ஆசிரியர் உதயம் ராம் தலைமையில் பாவையர் மலர் ஆசிரியர் வான்மதி முன்னிலையில் நூல் வெளியிடப்பட்டது.

கல்வெட்டுப் பேசுகிறது ஆகியர் கவிஞர் சொர்ணபாரதி இந்தியன் மிசனறிச் சங்க முன்னால் மேலாளர் வின்சன்ட் ஆகியோர் வாழ்த்துரை வழங்க. இந்து தமிழ் திசை முதுநிலை உதவி ஆசிரியர் கவிஞர் மு. முருகேஷ், இனிய நந்தவனம் இணையாசிரியர் கவிஞர் பா. தென்றல் இருவரும் நூல் குறித்து ஆய்வுரை

வழங்கினர் நூலாசிரியர் கே. நித்தியானந்தன் ஏற்புரை வழங்கி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

கொரோனா பற்றிய அனைத்துத் தகவல்களும் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளது கெரோனா நோய்த் தொற்றின் தாக்கம் அதனால் ஏற்பட்டுன்ன நன்மை தீமை என பல ஆதாரங்களுடன் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளதாக ஆய்வுரையில் மு. முருகேஷீம், பா. தென்றலும் குறிப்பிட்டனர்.

நிகழ்வின் முன்னதாக பாரதியார் மகளிர் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ஆ.த. ஆடில் ஷிம்மிபெல் அனைவரையும் வரவேற்க நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்வை சிகப்பாக தொகுத்து வழங்கினார்.

இலக்கிய ஆர்வலர்கள் பத்திரிகையாளர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ராமநாதபுரம் அகதி முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்களின் குறைகளை கேட்டறிந்த ஆணையர்

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பேரூராட்சி, மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் குறித்து அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரக இயக்குநர் ஜெசிந்தாலாசரஸ், இ.ஆ.ப., 11.08.2021 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா. இ.ஆ.ப., அவர்களுடன் நேரில்பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி அகதிகள் முகாம்களில் வாழ்கின்ற தமிழர்களுடைய துறை வாரியாக ஆய்வு நடத்தினார்கள். இலங்கைத் தமிழர்கள் தன்மானத்தோடு வாழ்வதற்கு அவர்களுக்கு தண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, வீட்டு வசதிகள் மற்றும் என்னென்ன அடிப்படை வசதிகள் தேவைப்படுகிறது. மேலும் அகதிகளுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கும் பணிகள் மற்றும் மாதாந்திர உதவித்தொகை வழங்கும் பணிகளையும் ஆய்வு செய்து அகதிகளிடம் குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் 400 குடும்பங்கள் 1400 நபர்கள் வசிக்கின்றனர். அகதிகள் முகாம்களில் உள்ள பள்ளிக்குழந்தைகளுக்காக கல்வி தொலைக்காட்சி காண்பதற்காக தொலைக்காட்சிப் பொட்டி அமைக்கப்படும் எனவும், முகாம்களில் உள்ளவர்கள் வேலைவாய்ப்பை பெறும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தவும், கல்வி கடன் உதவி வழங்கவும், முகாம்களில் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கவும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிகள் வழங்கி பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் குறித்து அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரக இயக்குநர் திருமதி. ஜெசிந்தாலாசரஸ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்த நிகழ்வுகளின் போது, கூடுதல் ஆட்சியர்.்.மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., தனித்துணை ஆட்சியர் மண்டபம் முகாம் சிவ. சிவக்குமாரி, இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு. வீ. ரவிச்சந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கொரோனா தொற்று நெருக்கடியில் நல்லூர்க் கந்தன் உற்சவத்தில் எமது நடவடிக்கைகள் தொடர்பாக நாம் வருந்துகின்றோம்

யாழ்ப்பாண நகர பிதா மணிவண்ணன் அறிவிப்பு

தற்போதைய கொரோனா தொற்று தொடர்பான நெருக்கடியான காலப்பகுதியில் எமது யாழ்ப்பாண மாநகர சபையினால் எடுக்கப்பெற்றுள்ள விசேட நடவடிக்கைகளினால் நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்திற்கு வரும் பக்தர்களுக்கு மிகுந்த அசௌகரியங்கள் ஏற்படும் என்பதை நாம் உணர்கின்றோம். எனினும் காலத்தின் தேவை கருதி, அவற்றை பொறுத்தருளுமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண மாநகர சபையின் தற்போதைய நகரபிதா மணிவண்ணன் அவர்கள். அவர் வெளிநாட்டு உள்நாட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தன் உற்சவ நடைமுறைகள் தொடர்பாக யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் வருமாறு, தற்போது பரவி வரும் கொரோனா தொற்றைக் கருத்திற் கொண்டு நல்லூர் முருகப்பெருமானின் இவ்வருட உற்சவம் முழுமையான சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பேணி அடியார்களின் பங்குபற்றுதலின்றி அல்லது அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடனேயே நடைபெறவுள்ளது.

எனவே இந்த நெருக்கடிமிக்க அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மிக மிக பொறுப்புடனும் அவதானத்துடனும் நடந்து கொள்ளுமாறு நல்லைக்கந்தன் அடியார்களை மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம். சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன் யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியால் விடுக்கப்படும் சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டும் சுகாதார அமைச்சினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கேற்பவும், நடைமுறைகளில் மாற்றங்கள் பற்றி அடியார்களுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படும். குழந்தைகளும் சிறுவர்களும் முதியவர்களும் ஆலயத்திற்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும்.

கொவிட்-19 நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீதித்தடையில் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் வேளையில் அடியார்கள் முழுமையாக நடைமுறைகளை பின்பற்றுவதோடு தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பதும் அவசியமாகும். ஆலயத்திற்கு அனுமதிக்கப்படும் வேளையில் ஆண் அடியார்கள் வேஷ்டியுடனும் பெண்கள் கலாசார உடைகளுடனும் வருதல் வேண்டும். சுகாதார நடைமுறைகளுக்கேற்ப அடியார்கள் ஆலயத்தினுள் வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவஸ்தானத்தின் அறிவுறுத்தல்களின் படி அவர்கள் ஆலய வளாகத்தினுள் தரித்து நிற்கவோ அமர்ந்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். உரிய சமூக இடைவெளியுடன் வழிபாட்டை நடாத்திச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

பக்தர்களின் நன்மை கருதியும் ஆலய உற்சவம் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் இம்முறையும் வீதித்தடைகள் நாளை நள்ளிரவு முதல் 08.09.2021 இரவு வரை முழுமையாகப் போடப்படும். வழமைபோல் மாற்றுப்பாதை அமுலில் இருக்கும். அடியவர்களின் சுகாதார நன்மையைக் கருத்திற்கொண்டு ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல அடியவர்களும் முத்திரைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியால் மாத்திரமே ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்திற்கு வந்து சேரும் ஏனைய மூன்று வீதிகளும் அடியவர்கள் செல்வதற்கு முழுமையாகத் தடை செய்யப்படும். வீதித்தடைக்கு உள்ளே நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மாநகர சபையின் அனுமதி அட்டையுடன் ஏனைய வீதித்தடைகளினூடாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர். ஆலயத்தினுள் அடியவர்களை அனுமதிப்பது, எத்தனை பேரை அனுமதிப்பது போன்றவை தொடர்பாக அவ்வப்போது உள்ள நிலைமைகளைக் கருத்திற் கொண்டு சுகாதாரத் தரப்பின் வழிகாட்டலோடு தீர்மானிக்கப்படும்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்கள் மேற்கொள்ளுதல், தாகசாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலிலும் ஆலயத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள்,நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆலய உற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றத்தவறுவோர் அல்லது மீறுபவர்களின் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவேண்டும்.

கனடிய செய்திகள்
Canadian News

நான்காவது அலை தொற்று வந்தாலும் தேர்தலை நடத்த முடியும் என்கிறார் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

கனடாவில் நான்காவது அலை தொற்று வந்தாலும் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்ததாக அவரது உதவியாளர்கள் சமூக ஊடகங்களில செய்திகளை எழுதியுள்ளதாக அறியப்படுகின்றது.

இதேவேளை, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கத் தயாராகும் நிலையில் உள்ளார் என்றும் இது பற்றிய அறிவிப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமை வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் நான்காவது தொற்றுநோய் அலைக்கு தொடர்பான அச்சுறுத்தல் உள்ள நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவது ஏற்தல்ல என்று பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியும் புதிய ஜனநாயகக் கட்சியும் பிடிவாதமாக நிற்கும் நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவதில் எவ்வித சிரமமும் இருக்காது என்று பிரதமர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பிரதான எதிர்க் கட்சிகள் இரண்டும் பொதுத் தேர்தலை எதிர்க்கும் நிலையில் கனடியப் பிரதமரோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கனடாவின் புதிய ஆளுனர் நாயகமாகிய மேரி சைமன் அம்மையாரை சந்தித்து பாராளுமன்றத்தைக் கலைகக்கும் படியான வேண்டுகோளை விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு பிரதமரின் வேண்டுகோளை கனடாவின் ஆளுனர் நாயகம் ஏற்றுக்கொண்டால், எதிர்வரும் செப்டம்பர் மாதம், 20 ம் திகதியன்று தேர்தலுக்கான திகதியாக அறிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவவாறான தேர்தல் அறிவிப்புக்கள் கனடாவில் எதிர்பார்க்கப்படும் நிலையில் கனடாவின் உயர்மட்ட பொது சுகாதார அதிகாரியான டாக்டர் தெரசா டாம் அம்மையார் எதிர்பார்க்கப்படும் தேர்தல் அறிவிப்பை எவ்வாறு பார்க்கின்றார் என்று இன்று ஒட்டாவாவில் செய்தியாளர்கள் அவரிடம் வினாவிய போது, கோவிட் வைரஸின் டெல்டா மாறுபாடு, இந்தியாவில்தான் முதன்முதலில் அடையாளம் காணப்பட்டது என்றும் கனடாவில் தொற்றுநோயின் நான்காவது அலையை தோற்றுவிக்கும் தன்மை அதிகமாக இருப்பதாகவும், இந்நிலையில் தடுப்பூசி போடும் விகிதங்களை அதிகரிக்க மாகாணங்களின் அரசாங்கங்கள் போராடுவதால் நோயின் தாக்கத்தை தணிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 13,000 க்கும் மேற்பட்டவர்கள் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள் என்றும் பெரும்பாலும் தடுப்பூசி போடாதவர்களையே இந்த புதிய வகை வைரஸ் தொற்றுவதன் காரணமாக நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இப்போது கூட்டாட்சி பிரச்சாரத்தை நடத்துவது பாதுகாப்பானதா என்று அவரிடம் கேட்கப்பட்டபோது அனைத்து சுகாதார நிறுவனங்களும் அமைப்புகளும் உள்ளூர் பொது சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று கூறிய தாம் அம்மையார் இந்த நேரத்தில் ஒரு தேர்தலை நடத்துவது ஆபத்தானது என்று எதிராக கருத்துச் சொல்வதை தவிர்த்தார் என்றும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

தாம் அம்மையார் தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு திணறிய வண்ணம் பதிலளித்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் "கனடாவின் தலைமை பொது சுகாதார அதிகாரி என்ற வகையில் நான் கனடிய மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும்?" எவ்வாறு கனடியர்களை பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது குறித்த வழிகாட்டுதலை வழங்குவதே தனது வேலை என்று கடும்போக்கில் பதிலளித்ததாகவும் அறியப்படுகின்றது. மேலும் தாம் அம்மையார் தேர்தல் தொடர்பாக குறிப்பிடுகையில், பிரச்சாரம் செய்யும் வேட்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஆகியோர் முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டும், முகமூடி அணிந்தும் கைகளை கழுவியும் தங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்"பிரச்சாரம் செய்யும் எவரும் அந்த சிறந்த நடைமுறைகளைக் கவனிக்க வேண்டும், மேலும் உள்ளூர் பொது சுகாதார வழிகாட்டுதல்களையும் பின்பற்ற வேண்டும் என்பதும் அவசியம் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதிகள் பயன்படுத்தப்படுகின்றன, இந்த வேறுபாட்டால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படலாம்" என்றும் தாம் அம்மையார் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக ஒட்டாவாவில் உள்ள சுகாதார தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், கனடிய தேர்தல் திணைக்களம் மற்றும் ஒரு தொற்றுநோயின் மத்தியில் தேர்தல்களை எவ்வாறு நடத்துவது என்பது பற்றி கனடாவில் உள்ள அனைத்துக் கட்சிகளால் நிறையவே கற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக பிரிட்டிஸ் கொலம்பியா, சஸ்கச்சுவான், நியூ பிரன்சுவிக் மற்றும் நியூ.ஃபவுண்ட்லேண்ட் லாப்ரடோர், ஆகிய மாகாணங்களில் நோய்த் தொற்றுக் காலத்தில் நடத்தப்பெற்ற தேர்தல்கள் கனடியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றும் எனவே நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் அவ்வாறான சுகாதார ஏற்பாடுகளை அனைவரும் சேர்ந்து செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

தன் அறிவுசால் பேச்சாற்றலால் சபையோரைக் கட்டி வைத்த பாரதி பாஸ்கருக்கு தலையில் அறுவைச் சிகிச்சை

தமிழர் சிந்தனை கலை வெளிபாட்டு வடிவங்களில் சிறப்பான ஒரு வடிவமாக பட்டிமன்றங்கள் இருந்து வருகின்றன. காலங்கள் மாறினாலும் தொலைக்காட்சியில் எத்தனையோ புதுத் திரைப் படங்கள் ஒளிபரப்பப்பட்டாலும் பண்டிகை நாட்களில் நம் இல்லங்கள் தோறும் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது பட்டிமன்றம்.

பல சுவையான மற்றும் சுவாரஸ்யமான தலைப்புகளின் கீழ் நடத்தப்படும் பட்டிமன்றங்கள் ரசிகர்களை கவர எப்போதும் தவறுவதில்லை. கூடவே தமிழகத்தில் இருக்கும் தரமான பட்டிமன்ற பேச்சாளர்களால் நிகழ்ச்சி மேலும் மெருகூட்டப்படுகிறது. பொதுவாக சொலமன் பாப்பையா தலைமையில் இடம்பெறும் பட்டிமன்றங்கள் பட்டி தொட்டி எங்கும் பிரபலம். இதில் தவறாது கலந்து கொண்டு சின்னத்திரை மற்றும் பட்டிமன்ற ரசிகர்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் வகையில் மிக நேர்த்தியாக பேச கூடிய மிக சிறந்த பேச்சாளர் திருமதி பாரதி பாஸ்கர். இவரது பேச்சை கேட்கும் யாரும் ஊக்கம் பெறாமல் இருக்க மாட்டார்கள்.

அந்த அளவிற்கு அனைத்து வயதினரையும் கவரக்கூடிய வகையில் சிறந்த பேச்சாற்றலை பெற்றவர். அழகு தமிழில் கூர்மையாகவும், ரசிக்கும் படியும் பேசும் மேடை பேச்சாளரான 52 வயதான பாரதி பாஸ்கர், கெமிக்கல் இன்ஜினியரிங் மற்றும் எம்பிஏ படித்துள்ளார். மேலும் பிரபல முன்னணி தனியார் வங்கி ஒன்றில் மூத்த அதிகாரியாக முக்கிய பொறுப்பில் பணி செய்து வருகிறார். இந்நிலையில் பிரபல பட்டிமன்ற பேச்சாளரான பாரதி பாஸ்கருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து அவர் சென்னையில் இருக்கும் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

வழக்கம் போல பணி முடிந்து வீடு திரும்பிய பாரதி பாஸ்கர், தனக்கு தாங்க முடியாத அளவிற்கு தலைவலிப்பதாக குடும்ப உறுப்பினர்களிடம் கூறி இருக்கிறார். இதனை அடுத்து சற்றும் தாமதிக்காமல் அவரை குடும்ப உறுப்பினர்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். உடல்நலக்குறைவு ஏற்பட்டவுடனே விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பாரதி பாஸ்கரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு மூளைக்குச் செல்லும் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை கண்டறிந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருக்கு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் எடுத்து பார்த்த போது மூளையில் ரத்தக்கசிவு போன்றதொரு பாதிப்பு காணப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. இந்த பாதிப்பை சரி செய்ய பாரதி பாஸ்கருக்கு சிறப்பு மூளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன. பாரதி பாஸ்கரின் மூளைக்குச் செல்லும் நரம்புகள் சேதமடைந்திருக்கலாம் என்பதால் அவர் மூளை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆரம்பகட்ட அறிக்கைகள் தகவல் தெரிவிக்கின்றன.

இதனிடையே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பாரதி பாஸ்கர் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று ரசிகர்கள், தமிழ் உணர்வாளர்கள் மற்றும் பிரபலங்கள் என பல்வேறு தரப்பினரும் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர். உலகத் தமிழர்களை கலக்கமடையச் செய்திருக்கும் பாரதி பாஸ்கர் தொடர்பாக நேற்று கனடா வாழ் எழுத்தாளர் வீணைமைந்தன் அனுப்பி வைத்த ஏக்கம் வெளிப்படும் ஆக்கத்தை இங்கே தருகின்றோம்

- பிரதம ஆசிரியர்-கனடா உதயன்

"பாரதி" தாயே மீண்டெழுந்து வந்திடுவாய்!

பார் போற்றும் பாரதி பாஸ்கர்
பதறும் செய்திக்குள்ளானார்
பாரதிர்ந்தது, ஊரதிர்ந்தது,
வீடதிர்ந்தது,காடதிர்ந்தது,
மன்றதிர்ந்தது,கலைமகள் நெஞ்சதிர்ந்தது,
அலைமகளும்,மலைமகளும் இணைந்திருந்தனர்
தமிழ்த்தாயும் அதிர்ந்தனள்.

மேடையிலேதமிழ் முழக்கம் செய்தவேளை,
தமிழ் மன்று மௌனித்தது,
எங்கள் சகோதரி பாரதிக்கு
ஏன் இந்த அதிர்வு?

அன்னைத் தமிழ்பேசி
அகத்தியன் மகளானாள்!
முன்னைத்தினனாய்,
முத்தமிழின் வடிவானாள்!
கத்தும் கடலோசை
காதினிலே விழாது
முத்துத் தமிழ் முழங்கி
மூவுலகை மயக்குபவள்
மூச்சையுற்று மயங்கினாளே!

தீக்கெட்டும்
தீந்திமிழால்
சொக்கவைத்த சொல்லழகி
சோர்வின்றித் தமிழரெல்லாம்
பார்மகளாம் பாரதியின்
சொல் வீச்சால் நிமிர்ந்திடுவோம்!

கார்கால மேகமெனத்
தமிழ்மாரி பொழியுமெங்கள்
கவிபாரதியின் செல்லமகள்
"பாரதி" இவளேயென
எத்திக்கும் சென்றேதான்
தேமதுரத் தமிழ்லொலித்து
மாமதுரைத் தமிழ்ச்சங்கமாக வந்தாள்!
மாதரசியானவளை
கலையரசி கலைவாணித் தத்தெடுத்த
சொல்லரசி பாரதியே மீண்டெழுந்து
சீக்கிரமாய் வந்திடம்மா!

சின்னஞ் சிறு மகளாய்,
சிற்றாடை தனைஅணிந்து
திருவல்லிக்கேணித் தெருவெங்கும்
பார்த்தசாரதியின் திருமகளாய் வலம் வந்து,
பூத்தமலர் போன்று புதுமகளாய் வந்தவளே!
காத்தருளும் மயிலை கற்பகாம்பாளும்
கபாலீஸ்வரரும்,
பொல்லாதவீணையெல்லாம் போக்கிவிடும்
தாய் எங்கள் கற்பூரநாயகி கனவல்லி
காளிமகமாயிதேவிகருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்தவல்லி தெய்வயாணை அம்மா
விற்கோலவேதவல்லி விசாலாட்சியம்மா
விழிக்கோலமா மதுரை மீனாட்சியம்மா
அருள்பொங்கமறுபிறவிஎடுத்தேதான்
எழிலரசி தமிழரசிதாயே! பாரதி!,
"கலையரசி"யாய்க் காணுகின்ற
காட்சிதனைக் கண்குளிர மெய்சிலிர்க்க
காண்பதற்குக் கடுகி நீவந்திடம்மா!

வீணைமைந்தன்.- கனடா

கனடிய செய்திகள்
Canadian News

ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி தனது அலுவலகத்தில் உதயன் லோகேந்திரலிங்கத்தைக் கௌரவித்தார்

கனடா உதயன் பத்திரிகை தனது 25 ஆண்டு கால ஊடகப் பணியை பூர்த்தி செய்தது தொடர்பாக கடந்த வாரம் வெளியிட்ட அதன் வெள்ளிவிழாச் சிறப்பிதழையும் உதயன் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கத்தையும் கௌரவிக்கும் முகமாக கனடா-ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தனது அலுவலகத்திற்கு அவரை கடந்த திங்கட்கிழமை 9ம் திகதி மதியம் அழைத்திருந்தார்.

அங்கு திரு. லோகேந்திரலிங்கத்தைப் பாராட்டும் வகையில் ஒன்றாரியோ அரசாங்கம் சார்பான வாழத்துப் பத்திரத்தை வாசித்து அவரிடம் கௌரவித்தார். அத்துடன் மதிய போசனவிருந்தும் அங்கு இடம்பெற்றது.

இவ்வேளையில், அங்கு லோகன் கணபதி அவர்களின் அலுவலக உதவியாளர் சிவா அவர்களும் ஏனைய தொண்டர்களும் அங்கு சமூகமளித்திருந்தனர். அப்போது அங்கு சிற்றுரையாற்றிய லோகன் கணபதி அவர்கள், கனடா உதயன் பத்திரிகை கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு அடையாளமாகவும் அதேவேளையில் இங்குள்ள வர்த்தக சமூகத்தையும் அரசியல் தலைவர்களையும் சமூகத்தோடு இணைக்கும் அற்புதமான பணியையும் ஆற்றிவருகின்றது என்றும் அதற்காக அதன் பிரதம ஆசிரியர் அவர்களின் தன்னலமற்ற சேவையையும் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

(படங்கள் மற்றும் செய்தி:- சத்தியன்)

கனடா – ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்த்தானத்தின் இரதோற்சவம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது

கனடா-ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்த்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் கடந்த திங்கட்கிழமை காலை தொடக்கம் மதியம் வரை நடைபெற்றது.

வருடா வருடம் வெளிவீதி வலம் வந்து, வெகு சிறப்பாக நடைபெறும் இரதோற்சவம் இவ்வருடம் உள்வீதியில் மூன்று சிறிய இரதங்கள், விநாயகர், முருகன், அம்பாள் ஆகியவர்களுக் குரியவையாய் வலம் வந்தன.

அடியார்கள் வடம் பிடித்து வர, அழகிய சிறிய இரதங்களில் மூப்பெரும் கடவுளர்கள் அடியார்களுக்கு காட்சி தந்தனர்.

ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் கணேச சுவாமிகள் அவர்களின் தலைமையில் உப சிவாச்சாரியார்கள் அனைத்து கடமைகளையும் நேர்த்தியாகச் செய்திருந்தனர்.

இரதோற்சவத்தின் பிரதம உபயகாரரான வர்த்தகப் பிரமுகர் திரு கணேசன் சுகுமார் அவர்கள் தனது குடும்பத்தினர் சகிதம் அங்கு பிரசன்னமாகியிருந்தார். மூன்று இரதங்களும் இருக்கைக்கு வந்தவுடன் கர்நாடக இசைக் கச்சேரி இடம்பெற்றது. பக்தர் அனைத்து அபிசேகங்கள் பூசைகள் அனைத்திலும் பக்திபூர்வமாக கலந்து கொண்டு அன்னதானத்திலும் பங்கு கொண்டு இல்லம் ஏகினர்.

தற்போதைய கோவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு ஏற்பவும், ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இடையூறுகள் இல்லாமலும் உள்வீதியில் இவ்வருடத்து இரதோற்சவம் நடைபெற்றது குறித்து பக்தர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

(செய்தி மற்றும் புகைப்படம்: சத்தியன்)

கனடா உதயன் – வெள்ளிவிழா ஆண்டு சிறப்பிதழ் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது

கனடா உதயன் பத்திரிகை கடந்த 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சேற்றிய வெள்ளிவிழா ஆண்டு சிறப்பிதழ் கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது உப சிவாச்சாரியார்கள் சகிதம் மிகுந்த சிரத்தையோடு செய்திருந்தார்.

ஆலயத்தில் இடம் பெற்ற சிறப்புப் பூஜைகளையடுத்து வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் அவரது பாரியார் ஆகியோருக்கு கௌவரம் வழங்கப்பெற்று பின்னர் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் உதயன் பத்திரிகையின் சமூகப் பணி மற்றும் வர்த்தக சமூகத்தை "உதயன்" எவ்வாறு ஊக்குவித்து வருகின்றது போன்ற விடயங்களைக் கூறினார்.

மேலும் தனது ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறுகின்ற விசேட திருவிழாக்கள் மற்றும் அபிஷேகங்கள் ஆகியவை தொடர்பான செய்திகளையும் விமர்சனங்களையும் எவ்வாறு உதயன் பத்திரிகை மக்களுக்கு கொண்டு செல்கின்றது என்பதையும் விளக்கமாகக் கூறினார்.

தொடர்ந்து ஆலயத்தில் கூடியிருந்தவர்களுக்கு "உதயன்" பத்திரிகைப் பிரதிகள் மற்றும் பிரசாதம். ஆகியன வழங்கப்பெற்றன.

இங்கு காணப்படும் புகைப்படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

(படங்கள் செய்தி:- ஜெயா ஐயா)

இந்தியா செய்திகள்
India News

அன்னைத் தமிழில் அர்ச்சனை பாடல் நூல்களை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்

அன்னைத் தமிழில் அர்ச்சனைக்கான போற்றி பாடல் நூல்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

"முதல்வர் மு.க.ஸ்டாலின், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" செய்யவிருக்கும் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகையை வெளியிட்டார். முதற்கட்டமாக, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 47 முதுநிலை கோவில்களில் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகைகள் வெளியிடப்பட்டு, தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது.

இதன்மூலம், தமிழில் வழிபட வேண்டும் என்ற பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" எனும் கொள்கையில் திளைத்த தமிழ் அறிந்த பெருமக்கள், பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றி பாடல் நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (12.8.2021) வெளியிட்டார்.

இறைவனின் பெருமைகளையும் பதிகம் மற்றும் பாடல்களால் உயர்வாக "ஒப்புமை செய்து" போற்றுவதற்கு போற்றி நூல்கள் வழிவகுக்கும்.

இந்த முயற்சியின் மூலம், கோவில்களில் தமிழ் வழிபாடு ஊக்குவிக்கப்படுவதுடன், பொதுமக்களும் தாம் அறிந்த தமிழ் மொழி மூலம் அர்ச்சனை என்பதால் அகமகிழ்வார்கள்.

அறிந்த மொழியில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்கவும், அர்ச்சகர் சொல்வதைப் பக்தர்கள் புரிந்து கொள்வதற்காகவும் இந்தப் போற்றி நூல்கள் உறுதுணையாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியின்போது, இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு, அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் உடனிருந்தனர்".

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள்ளுங்கள்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

ontario.ca/bookvaccine இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள 1-888-999-6488 ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

'உதயன்' வெள்ளிவிழா சிறப்பிதழ் பிரதிகள் பல்வேறு துறை சார்ந்த அன்பர்களிடம் கையளிக்கப்பெற்றன

கடந்த 6ம் திகதி வெளியான எமது 'கனடா உதயன்' வெள்ளிவிழா சிறப்பிதழ் பிரதிகள் பல்வேறு துறை சார்ந்த அன்பர்களிடம் கையளிக்கப்பெற்றன. ஆன்மீகம், அரசியல், வர்த்தகம், சமூகம மற்றும் கலையுலகம் சார்ந்த அன்பர்கள் மற்றும் நண்பர்கள் சிலர் மிகுந்த விருப்பத்தோடு மேற்படி பிரதிகளை பெற்றுக் கொண்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ரொரன்ரோ மற்றும் மொன்றியால் நகரங்களில் சிறப்புப் பிரதிகள் கையளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(படங்கள் மற்றும் செய்திகள்:- சத்தியன்)

CONGRATULATIONS TO CANADA UTHAYAN'S 25TH ANNIVERSARY

Celebrating 25 years of active community service through Tamil journalism.

கனடாவில் ஒவ்வோர் வெள்ளிக்கிழமைகள் தோறும் தடையின்றி தொடர்ந்து தமிழ் மொழி பத்திரிகையாக வெற்றிகரமாக 25 ஆண்டுகள் பயணித்து தமிழ்மக்களின் மனங்களில் நீங்காத இடம் பெற்று,தமிழுக்கும் இமாலய சேவையாற்றி வெள்ளிவிழா கொண்டாடும் கனடா உதயன் பத்திரிகைக் கும் தமிழ் எழுத்துறையில் 50 ஆண்டுகள் வெற்றிகரமாக தரமான படைப்புகளை தந்துகொண்டிருக்கும் அதன் பிரதம ஆசிரியர் திரு லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும்,நன்றிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

I would like to extend my congratulations and appreciation to the Canada Uthayan Tamil Newspaper and the Editor in Chief, Logan Logendralingam. It's been 25 years of hard work, dedication, and commitment to delivering news to the Tamil community. You have made an everlasting impact as you help bring awareness to Tamil Canadians regarding issues around the world. Thank you for all the contributions that you have made to our community, and I wish you more success in the future.

LOGAN KANAPATHI
MPP - Markham-Thornhill

Logan Kanapathi
MPP Markham-Thornhill
Constituency Office: 450 Alden Road,
Unit 5 Markham, ON L3R 5H4
Tel: 905-305-1935
Email: logan.kanapathico@pc.ola.org

இலங்கை பெரிய நீலாவணையில் உருவாகிவரும் திருத்தொண்டர் திருமாடாலயப் பணிகள்



சிவனேரி அறப்பணி மன்றம்
SIVANERY ARAPPANI MANDRAM
திருநீலகண்டர் கட்டடம், சேனைக்குடியிருப்பு, கல்முனை
Thiruneelakander Building, Chenai Kudiyiruppu, Kalmunai
Email Ad :- sivaneriarilankar@gmail.com A/C No :- 78242524 (Bank of Ceylon Kalmunai)

26.07.2021

அறநெறி பாடசாலை, யாத்திரிகர் மடம் அமைப்பதற்கு நிதி உதவி கோரல்

இலங்கை பெரிய நீலாவணையில் உருவாகி-வரும் திருத்தொண்டர் திருமாடாலயப் பணிகள் அருட் தொண்டர்களின் ஆதரவோடு முனைப்புடன் நடை பெற்று வருகின்றது. அதன் விவரங்கள் இணைப்பில் உள்ளன.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
மனமுடையோர் வாய்ச்சொல் அருளீர்!
தன்னார்வலர் உழைப்பினை நல்கீர்!
பிறருடன் பகிர்ந்து பெரும்பணி ஆற்றுவீர்!
தாயக மண்ணில் தர்மம் தழைத்திட
நற்பணி ஆற்றிட நாமும் இணைவோம்!

இலங்கை சொந்தங்களுக்காக...
தமிழ் நாட்டிலிருந்து... சங்கரநாராயணன்

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....

மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

ஈஸ்டர் தாக்குதல் சந்தேக நபர்களை விடுவிக்க சஜித் கட்சி எதிர்ப்பு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்- லண்டன்)

இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று நடைபெற்ற தாக்குதலில் விசாரணைகள் இன்னும் தொடருவதாக அரசு கூறுகிறது.

அந்த தாக்குதல் குறித்த விசாரணைகள் விரைவாக முடிக்கப்பட்டு குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தப்பட வேண்டும் என்று அத்தக்குதலில் உயிரிழந்தவர்கள் சார்ந்த நாடுகள் இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரித்து வருகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் முக்கிய சந்தேக நபரான சஹ்ரானுடன் யார் யார் தொடர்பிலிருந்தார்கள் என்பது குறித்தும் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாக அரசு கூறுகிறது. சஹ்ரானை அரச படைகள் சுற்றி வளைத்த போது அவரும் அவருடைய குடும்பத்தார் சிலரும் தம்மைத்தாமே வெடிக்க வைத்துக் கொண்டனர் என்று அப்போது பொலிசார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலை நடத்திய முஹமது ஹஸ்தூனின் மனைவி சாரா ஜெஸ்மின் என்கிற புலஸ்தினி ராஜேந்திரன் எங்குள்ளார் எனும் தகவல் இதுவரை இல்லை.

இதேவேளை சந்தேகத்தின் அடிப்படையில் இத்தாக்குதல் தொடர்பில் பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விசாரணையின்றி விடுவிக்க நாடாளுமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை நீதிமன்றம் விடுதலை செய்தமைக்கு தமது கண்டனத்தை தெரிவிப்பதாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி வார இறுதி ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் அஹ்மத் அலாவுதீனின் தந்தை அலாவுதீன் அஹமட் முயாத், கொழும்பு பிரதம நீதவான் புத்திக சிராகலவினால் கடந்த 6ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

அலாவுதீனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய போதிய சாட்சிகள் இல்லாமையால், அவர் மீது இனி வழக்குத் தொடர முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்ததைத் தொடர்ந்து அலாவுதீன் விடுதலை செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சந்தேகநபர்கள் தற்போதைய அரசால் விடுவிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

"ஏப்ரல் 21, 2019 அன்று சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்திய மொஹமட் இப்ராகிம் இன்ஷாப் அஹமட்டுக்கு சொந்தமான வெல்லம்பிட்டிய செப்பு தொழிற்சாலையின் அனைத்து ஊழியர்களும் முன்னர் விடுவிக்கப்பட்டனர்" என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்து சந்தேகநபர்கள், அவர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்ற சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு விடுத்த கோரிக்கையை அடுத்து, கொழும்பு மேலதிக நீதவான் ராஜிந்த்ர ஜயசூரியவினால் விடுவிக்கப்பட்டனர்.

ஏப்ரல் 21, 2019 அன்று பல தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதுத் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் அமெரிக்கா மூன்று இலங்கையர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளதோடு, பயங்கரவாத சட்டங்களை பயன்படுத்தி இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களுக்கு எதிராக இதுவரை வழக்கு தொடரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதல்களில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலேயே மிக அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு புலனாய்வுத் தகவல்கள் தெரிந்திருந்தும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளானார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் "நல்லாட்சி அரசு" என்று தம்மைக் கூறிக் கொண்ட ரணில்-மைத்ரி ஆட்சியில் அவர்கள் இருவருக்கும் இடையே பெரும் பிளவுக்கு வழி வகுத்தது. இத்தாக்குதலை அடுத்து இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் மீதான அரசின் கெடுபிடிகள் அதிகரித்து அவர்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று மனித உரிமை அமைப்புகளும் அமெரிக்கா போன்ற நாடுகளும் கூறுகின்றன.

A Personal Greeting

from

Member of Provincial Parliament, Logan Kanapathi

I am very pleased to extend my best wishes and congratulations to Uthyan on the occasion of their **twenty-fifth Anniversary Celebrations**.

There is an enormous responsibility to propagate timely and genuine information, news, and views to people. In this new face of the world with vivid changes to socio-economic scenarios of countries and their governments, it is important to communicate the truth to people of our ethnicity. Uthayan is one such unique written medium that brings the true scenario of our Tamil struggle in our homeland and as recent immigrants in Canada, to the Canadian Tamils on a timely basis.

Your service to the Tamil community is remarkable. With your years of hard work, commitment and dedication that you are able to retain the title of a respected editor of the Canadian Tamil journalism industry. I congratulate and thank the Chief Editor of Uthayan, Mr. Logendralingam for his contribution in keeping our Tamil Community up to date with not only the local and community news but news from our homeland.

As a member of provincial parliament, I am proud of your efforts to continue to be an inspiration for youth in our community to pursue a career in journalism. I wish you continued success in all your future endeavours.

Best wishes,

Logan Kanapathi, MPP
Markham-Thornhill

CONSTITUENCY OFFICE | 450 ALDEN RD. UNIT #5, MARKHAM ON L3R 3L4 TEL: 905-305-1935 * logan.kanapathico@pc.ola.org

அன்னைத் தமிழில் அர்ச்சனை; பாடல் நூல்களை வெளியிட்ட தமிழக முதல்வர்

அன்னைத் தமிழில் அர்ச்சனைக்கான போற்றி பாடல் நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ''முதல்வர் மு.க.ஸ்டாலின், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" செய்யவிருக்கும் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகையை 3.8.2021 அன்று வெளியிட்டார். முதற்கட்டமாக, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 47 முதுநிலை கோயில்களில் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகைகள் வெளியிடப்பட்டு, தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது.

இதன்மூலம், தமிழில் வழிபட வேண்டும் என்ற பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.அதன் தொடர்ச்சியாக, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" எனும் கொள்கையில் திளைத்த தமிழ் அறிந்த பெருமக்கள் மற்றும் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றி பாடல் நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (12.8.2021) வெளியிட்டார். இறைவனின் பெருமைகளையும் பதிகம் மற்றும் பாடல்களால் உயர்வாக 'ஒப்புமை செய்து' போற்றுவதற்கு போற்றி நூல்கள் வழிவகுக்கும்.இந்த முயற்சியின் மூலம், கோயில்களில் தமிழ் வழிபாடு ஊக்குவிக்கப்படுவதுடன், பொதுமக்களும் தாம் அறிந்த தமிழ் மொழி மூலம் அர்ச்சனை என்பதால் அகமகிழ்வார்கள்.

அறிந்த மொழியில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்கவும், அர்ச்சகர் சொல்வதைப் பக்தர்கள் புரிந்து கொள்வதற்காகவும் இந்தப் போற்றி நூல்கள் உறுதுணையாக இருக்கும்.இந்த நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் உடனிருந்தனர்''. இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரை அழகுப்படுத்த என்ன செய்யலாம்? அதிகாரிகள் ஆலோசனை

சென்னை மாநகரை அழகுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சென்னை மெட்ரோ ரயில், மாநில நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி இன்று (ஆக. 12) வெளியிட்ட செய்திக்குறிப்பு: "தமிழக முதல்வர் சென்னையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், மாநகரை தூய்மையுடன் பராமரித்து அழகுப்படுத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை செயல்படுத்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அதன் தொடர்ச்சியாக, சென்னை மாநகரை அழகுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, சென்னை மெட்ரோ ரயில், மாநில நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், அரசு முதன்மைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி ஆகியோர் தலைமையில் இன்று ரிப்பன் கட்டிட வளாகத்தில் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து மாநகர எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு 426 சதுர கி.மீ. பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் உட்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் உட்கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்பத்துடன் சர்வதேச தரத்துக்கு உயர்த்திடும் வகையிலும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மெட்ரோ ரயில் பாலங்கள், மாநில நெடுஞ்சாலைகள், மாநகராட்சி பாலங்கள், சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றை அழகுப்படுத்த பல்வேறு விதமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.சென்னை மாநகரின் முக்கியப் பகுதிகளான விமான நிலையம் முதல் கத்திப்பாரா சந்திப்பு வரை, கோயம்பேடு மேம்பாலம், அண்ணா மேம்பாலம், மெரினா கடற்கரை, மெட்ரோ ரயில் நிலையத் தூண்கள், திருமங்கலம் மேம்பாலம் உட்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் சர்வதேச நகரங்களுக்கு இணையாக அழகுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இவ்விடங்களில் வண்ண ஓவியங்கள் வரைதல், மரம், செடிகளை நட்டு பசுமையாக பராமரித்தல், வண்ண ஒளிரும் விளக்குகளால் அழகுப்படுத்துதல், முக்கியச் சந்திப்புகளில் செயற்கை நீரூற்றுகளை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள சென்னை மெட்ரோ ரயில், மாநில நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகராட்சி ஆகிய துறைகளுடன் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் பல்வேறு கலந்தாலோசகர்களின் மூலம் வடிவமைக்கப்பட்ட மாதிரி திட்டங்களின் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. வருங்காலங்களில் மேற்குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்வது தொடர்பாக, மூன்று துறைகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாதந்தோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.முன்னதாக, பிரதீப் யாதவ், ககன்தீப்சிங் பேடி பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக முன்பகுதியில் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் அழகுப்படுத்துதல் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் பேரறிவாளனுக்கு மருத்துவப் பரிசோதனை

விழுப்புரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் பேரறிவாளனுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட 7 நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், பேரறிவாளனுக்கு தமிழக அரசு கடந்த 2017ம் ஆண்டு 60 நாட்கள் பரோலும், இதனையடுத்து, 2019ம் ஆண்டு பேரறிவளானின் தந்தை குயில்தாசனின் உடல்நிலை மற்றும் அவரது தங்கையின் மகள் திருமணத்துக்காக தமிழக அரசு 30 நாட்களும், மேலும் பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் 90 நாட்களுக்கு பரோல் அனுமதி கோரி, இருந்த நிலையில் 30 நாட்கள் பரோல் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் தமிழக அரசுக்கு பேரறிவாளன் உடல்நிலையை கருத்தில் கொண்டு, வீட்டில் தங்கி மருத்துவ சிகிச்சை அளிக்க மனு அளித்து இருந்தார். இதனையடுத்து, தமிழக அரசு பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கி உத்தரவிட்டது.இந்நிலையில், பேரறிவாளனின் பரோல் காலத்தை மேலும் நீடிக்க வேண்டும் என, அவரது தாயார் அற்புதம் அம்மாள் தமிழக அரசுக்கு விடுத்த கோரிக்கையை ஏற்று, பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பரோல் நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கடந்த 27ம் தேதி அறிவித்தது.சிறுநீரக கோளாறு காரணமாக, கடந்த நவம்பர் மாதம் அறுவை சிகிச்சை செய்துகொண்ட அவர் தொடர் பரிசோதனைகளுக்கு தன்னை உட்படுத்தி வருகிறார்.அதன்படி, மருத்துவப் பரிசோதனைக்காக பேரறிவாளன் இன்று (ஆக. 12) தனது இல்லத்தில் இருந்து போலீஸ் பாதுகாப்புடன் தனது தாயார் அற்புதம் அம்மாளுடன் விழுப்புரம் புதுச்சேரி சாலையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு வந்துள்ள அவர், மருத்துவர் தியாகராஜனிடம் உடல் பரிசோதனை செய்துகொண்டார்.

மேலும், அவர் 2 நாட்கள் தங்கி பரிசோதனை செய்து கொண்டு வீடு திரும்புவார் என, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவரது வருகையையொட்டி, விழுப்புரம் புதுச்சேரி சாலை மற்றும் தனியார் மருத்துவமனையில் ஏராளமான போலீஸார் பாதுக்காப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வங்கி கணக்கு, பாஸ்போர்ட் முடக்கம்

லஞ்ச ஒழிப்பு துறையின் சோதனையை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்கை அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு தொடர்புடைய 60 இடங்களில், லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் கடந்த 10ம் தேதி சோதனை நடத்தினர். சோதனையின் முடிவில் ஏராளமான சொத்து ஆவணங்கள், டிஜிட்டல் ஆவணங்கள், பணப் பரிவர்த்தனை ஆதாரங்கள், வங்கி கணக்கு ஆவணங்கள், ரூ.2 கோடி வைப்பு நிதி ஆவணம், வங்கி லாக்கர் சாவிகள், ரூ.13 லட்சம் பணம் ஆகியவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.

எஸ்.பி.வேலுமணி வீட்டில் நடத்திய சோதனையை தொடர்ந்து, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.எஸ்.பி.வேலுமணியின் வங்கிக் கணக்கு, லாக்கர்கள் ஆகியவற்றை லஞ்ச ஒழிப்பு போலீஸார் இன்று (ஆக. 12) முடக்கி வைத்தனர். குறிப்பாக, ரூ.2 கோடி வைப்பு நிதி வைக்கப்பட்டிருந்த வங்கி கணக்கை முடக்கி வைத்துள்ளனர்.

மேலும், எஸ்.பி.வேலுமணி வெளிநாடு செல்வதை தடுக்கும் வகையில், அவரது பாஸ்போர்ட்டையும் முடக்கி வைத்திருப்பதாக, லஞ்ச ஒழிப்பு போலீஸார் தெரிவித்துள்ளனர்.சோதனையின்போது சிக்கிய அனைத்து நிறுவனங்களின் வங்கி கணக்குகளையும் முடக்கி வைப்பதற்கான நடவடிக்கைகளில், லஞ்ச ஒழிப்பு போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

உலக செய்திகள்
World News

சிங்கப்பூரில் நடைபெற்ற இளையர் விழா 2021

இளையர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை அதிகாரவப்பூர்வமாக அமைப்பினுள் கொண்டுவந்ததை கொண்டாடும் விதமாகவும், இளையர்களை உற்சாகப்படுத்தி திறம்படசெயல்பட அழைப்பு விடுக்கும் விதமாகவும், "இளையர் விழா-2021" என்ற நிகழ்வை ஆகஸ்டு மாதம் 8 ஆம் தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம் (சிங்கப்பூர்) இணையம் வழியாக சிறப்பாக நடத்தி இளையர்களுக்கு சிவப்பு கம்பளம் விரித்து உவகையுடன் வரவேற்று மகிழ்ந்தது.

இளையர்களை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி சங்கத்தின் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதே முன்னவர்களின் கனவு என்பதை பாரதியின் "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற வரிகளை மேற்கோளிட்டு கூறி விழாவிற்கு வந்துள்ள பெருந்தகையாளர்களையும், விருந்தினர் அனைவரையும் இனிதே வரவேற்றார் சங்கத்தின் தலைவர் திரு. சா. சௌந்தர்ராஜன்.

இம்மாபெரும் விழாவிற்கு மணிமகுடம் சேர்த்த சிறப்புப் பேச்சாளர் கலை-மாமணி பேராசிரியர் முனைவர். கு. ஞானசம்பந்தன், "வேரும் விழுதும்" என்ற தலைப்பில் அற்புதமாக உரையாற்றினார். அண்ணாமலைப்பல்கலைகழகத்தின் சிறப்புகளை எடுத்துரைத்த அவர் பின்னர் இளமைக் கால கல்லூரி நினைவுகளை தனது நகைச்சுவையான பேச்சால் மீட்டெடுத்து கொடுத்தது அருமை. நட்பின் பெருமையையும், சிறப்பினையும் திருக்குறள் மற்றும் கண்ணதாசன் வரிகளோடு நினைவு கூர்ந்தார். இன்றைய நடைமுறைப்படி, முன்னாள் மாணவர்கள் எடுக்கும் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளை பற்றி குறிப்பிட்ட இவர், ஆலமர வேர்களாகிய முன்னாள் மாணவர்களும், விழுதுகளாகிய இளையர்களும் கைகோர்க்க வேண்டியதன் அவசியத்தை சிறப்பாக எடுத்துக் கூறி விடைபெற்றார்.

கழகத்தின் ஆலோசகரான திரு. சேது நாராயணன், தன்னுடைய உரை-யில், நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று வந்துள்ள பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் திரு. வே. முருகேசன் அவர்களைப் பற்றி சிறப்பான சில செய்திகளை நினைவு கூர்ந்தார். அவர் துணைவேந்தராக பதவி வகித்த காலத்தில் அவர் பல்கலைக் கழகத்திற்கு ஆற்றிய அளப்பறிய பணியை-யும், சிங்கப்பூர் மற்றும் உலகளாவிய முன்னாள் மாணவர் சங்கத்துடன் அவருக்கு இருந்த தொடர்பைப் பற்றியும் களிப்புடன் எடுத்துரைத்து அவரை வரவேற்றார்.

"இளையர் விழா-2021" பற்றிய சிறப்புக் காணொளியை வெளியிட்ட பேராசி-ரியர் முனைவர் திரு. வே. முருகேசன், தன்னுடைய உரையில் இளையர்களின் கடமையையும், பொறுப்புகளையும் நினைவுபடுத்திய அவர், பரந்து விரிந்த இந்த பல்கலைக்கழகத்திற்கு அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயல்பட்டு உலகமே வியக்கும் அளவிற்கு நூற்றாண்டு விழாவை நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். மேலும் உலகமெங்கும் செயல்படும் முன்னாள் மாணவர்கள் இணைந்து பல்கலைக்கழக பெருமைகளை எட்டுத்திக்கும் பறைசாற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு விடைபெற்றார்.

சங்கத்தில் இளையர்களின் தரவுகளை சேகரித்த பெருமைகளைப் பற்றி எடுத்துரைத்த விழாவின் ஏற்பாட்டுக்குழு தலைவர் திரு. கருணாதிதி, சங்க விதி-முறைகளின் மாற்றம் பற்றி தெளிவாக விளக்கியதோடு மற்ற இளையர்களையும் குழுவில் சேர வருமாறு அழைப்பு விடுத்தார்.

இளையர்கள் இருவர் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்துகொண்டு நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டினர். சங்கத்தின் முதல் பெண் இளைய உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்ட திருமதி. புவனேஸ்வரி சிந்தனைச்செல்வன் பெண்களுக்கே உரிய நிறைய பணிகளுக்கு மத்தியில் இந்த கல்லூரி தோழமை புத்துணர்ச்சி அளித்து நம்பிக்கை விதையை விதைப்பதாக கூறி அகம் மகிழ்ந்ததோடு மேலும் நிறைய பெண்கள் இணைய முன்வரவேண்டும் என அன்பான வேண்டுகோள் வைத்தார். திரு. வடிவேலு, திரைக்கடல் தாண்டி திரவியம் தேட புலம்பெயர்ந்த சிறிது நாட்களில் கல்லூரித் தோழமையின் உயிர்துடிப்பான நட்பு சிங்கையிலும் தொடர்ந்து மலர, முன்னாள் மாணவர்கள் படைத்த நிறைய நிகழ்ச்சிகளினாலும், தன்னலமில்லா செயல்களினாலும் ஈர்க்கப்பட்டு தான் வாழ்நாள் உறுப்பினராக சேர்ந்த அனுபவத்தை நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டார்.

நிகழ்ச்சியை வழிநடத்தியமுன்னாள் தலைவர் திரு. நெடுஞ்செழியன் மற்றும் விழாவின் துவக்கத்தை தொகுத்து வழங்கிய திரு. செந்தில் சம்பந்தம் ஆகியோரின் இனிய தமிழ் பாராட்டுக்குரியது.

இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற உறுதுணையாய் நின்ற சிறப்புப் பேச்சாளர், பெருந்தகையாளர்கள், ஆதரவாளர்கள், ஏற்பாட்டுக்குழுவினர் மற்றும் குழு உறுப்பினர்களுக்கும் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை நல்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார் செயலாளர் செல்வி வீ. ஸ்வர்ணா.

செய்தி: ஷோபா குமரேசன்

கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

(அத்தியாயம் 23)

கல்கியின் பொன்னியின் செல்வன்

வந்தியத்தேவனின் கோடிக்கரைப் பயணம்

பழையாறையில் இருந்து மூலிகை எடுத்து வர என குந்தவையிடம் இருந்து விடைபெற்று, குதிரையில் பயணம் செய்த வந்தியத்தேவன் கோடிக்கரையை வந்தடைந்தான். இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்தில், நாகபட்டினம் மாவட்டத்தில், அமைந்துள்ள கடற்கரைப் பகுதி கோடிக்கரை. இக் கோடிக்கரை காலிமர்முனை, கள்ளிமேடு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. கோடிக்கரை கடல் ஓரத்தின் கரை அதிக ஆழம் கிடையாது. அங்கு கட்டு மரங்களும், சிறிய படகுகளும் தான் கரையை நெருங்கும். அங்குள்ள கலங்கரைவிளக்கம் கப்பல் ஓட்டிகளுக்கு மிகவும் உதவி செய்தது. ஆனால் இந்தக் கலங்கரை விளக்கம் தற்பொழுது சுனாமியால் அழிக்கப்பட்டு சில கற்கள் மட்டும் எஞ்சியுள்ள நிலையில் காணப்படுகிறது. அங்கு மரக்கலங்களும், நாவாயும் நெருங்கி வந்தால் ஆழமற்ற கடற்பரப்பில் மோதி உடைந்துவிடும். இதன் மறு பக்கத்தில் குட்டை மரங்கள் உள்ளன. அடர்ந்த காட்டின் நடுவே குழவர் கோயில் உண்டு. காட்டில் வேடுவர்கள் சிலர் வாழ்கின்றனர். இங்கு உள்ள கலங்கரை விளக்கத்தில் விளக்கினை ஏற்றி வைப்பதும், குழவர் கோயில் புஸ்ப கங்கரியம் செய்வதும் தியாகவிடங்கக் கரையர் என்னும் ஒரு பெரியவர். இவருக்கு ஒரு மகனும், மகளும் உண்டு. மகன் பெயர் முருகையன், இவர் மகள் பெயர் பூங்குழலி அழகில் ரம்பையைத் தோற்கடிப்பவள். இவளிடம் துணிவும், வலிமையும், அறிவுக்கூர்மையும் அளவற்றுக் காணப்பட்டது. நேர்மை கொண்ட இவள் செயல்கள் கூட விசித்திரமானவை. பூங்குழலி கடலில் படகோட்டுவதில் கைதேர்ந்தவள். கடலில் பயணம் செய்வது என்றால் அவளுக்கு அதீத விருப்பம் சமுத்திரம் தன் தந்தை என்று கூடச் சொல்வாள். இவள் கடலில் படகோட்டுவது, காட்டில் மானோடு போட்டி போட்டு ஓடுவது, கோயிலில் தெய்வத்தை தரிசிப்பது என்றே காலத்தை கழிக்கின்றாள். அவள் பாடலின் இனிமையில் இயற்கையே இயங்காது சத்தமின்றி காது கொடுத்து கேட்டுக் கொண்டிருக்கும். அன்று ஒரு நாள் அவள் பாடி முடித்த பின் கலங்கரை விளக்கத்தில் உச்சி மண்டபத்தில் தீ மூட்டியாகிவிட்டது என்று கண்டாள்.

கோயில் மணியோசையும் கேட்கவே அவள் கோயில் நோக்கி நடந்தாள். துள்ளிக் குதித்து மானைப் போல் மகிழ்வோடு அங்கு வந்தாள். பட்டரும் அவளைக் கண்டு மகிழ்ந்து பிரசாதம் கொடுத்துவிட்டு, 'அம்மா கொஞ்சம் பொறு நானும் உன்னோடு வருகிறேன் காட்டு வழியாகத்தானே நானும் வீடு போகவேண்டும் உன்னுடன் வந்தால் எனக்குப் பயம் இல்லை' என்றார். அவளும் பட்டர் வரும்வரை வெளியில் காத்திருந்தாள். அந்த வேளையில் குதிரைக் காலடியின் சத்தம் கேட்க, சத்தம் வந்த திசை நோக்கினாள். அவளுக்கு பழைய ஞாபகம் வந்தது. நடந்தவைகளை அசை போட்டாள். அந்தச் சத்தம் நெருங்கி வர அவளுக்கு கோபமும் வந்தது சரி யாராக இருந்தால் எனக்கென்ன? இங்கு புதுப் புது ஆட்கள் வருகிறார்கள் ராஜாங்க காரியம் என்று சொல்கிறார்கள் நேற்றுக் கூட இரண்டு பேர் வந்தார்கள் என் அண்ணனை படகு வலிக்கச் சொல்லி நிறையப் பணம் கொடுத்து ஈழத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்று தனக்குள் முணு முணுத்தாள். 'ஆ! இரண்டு பேர் இரண்டு குதிரைகளில் வருகிறார்கள் இவர்கள் மிகவும் களைத்துப் போய் இருக்கிறார்கள். ஒருவன் நல்ல வாலிபன் இலட்சணமாக, வாட்டசாட்டமாக இருக்கிறான். கம்பீரத் தோற்றம் ஆனால் ஆந்தை போல் இருக்கிறது அவன் முகம்' என்று எண்ணியபடி உற்று நோக்கினாள். அவனும் தன்னை உற்று நோக்குவதை அறிந்து அங்கிருந்து எழுந்து ஓடத் தொடங்கிவிட்டாள். உடனே அந்தக் குதிரையில் வந்த வந்தியத்தேவனும் குதிரையிலிருந்து குதித்து இவளைப் பின் தொடர்ந்து ஓடத் தொடங்கினான். காட்டிலும், மேட்டிலும், கல்லிலும், முள்ளிலும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து ஓடினான். திடீரென்று இது என்ன முட்டாள் தனம் இவளைப் பின் தொடர்ந்து ஓடுவது. ஏன் இப்படி நான் ஓடுகிறேன் என்று எண்ணிய வந்தியத்தேவன், சேந்தன் அமுதன் வர்ணித்த பெண் இவள் போல் தோன்றுகிறது அவள் பூங்குழலிதான் இவளிடம் பழக்கம் வைத்துக் கொண்டால் என் காரியத்திற்கு உதவுவாள் என்று நினைத்தான். ஆனால் இது ஓர் முட்டாள் தனம். திரும்பிப் போய்விடுவோம் என்று எண்ணினான். அதோ அவள் கடல் நோக்கி ஓடுகிறாள். அங்கு போய் நின்று விடுவாள் ஒருவாறு அவளைப் பிடித்துவிடலாம் என்றபடி மீண்டும் தொடர்ந்தான். அவன் கால்கள் ஓட மறுத்தது. இது என்ன நான் சேற்றில் காலை வைத்துவிட்டேனா? கால்கள் கீழே போகின்றன. என் கதி என்னாவது? சேற்று நிலத்தில் அகப்பட்டு விட்டேனா? ஐயோ! ஐயோ! என்று கத்தினான். இது புதை சேற்றுக் குழி போல் தெரிகிறதே! தரையைப் பார்த்தால் நன்றாகக் காய்ந்து பொறுக்குத் தட்டியிருக்கிறதே! உள்ளே இன்னும் சேறு காயவில்லை இதில் சிக்கியவைகள் யாவும் அமுங்கிக் கொள்ள வேண்டியதுதான். என் முழங்கால் வரை சேறு போய்விட்டதே! இதிலிருந்து எப்படித் தப்புவது காட்டு வழியில் யாராவது வருவார்களா? அல்லது அந்தப் பெண் என்னைக் காப்பாற்றமாட்டாளா? 'எனது கதி நான் சேற்றில் மூழ்கிச் சாகிறேன் யாராவது கை கொடுத்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கத்தினான். இவன் கத்தியது பூங்குழலியின் காதில் கேட்க, அவள் திரும்பிப் பார்த்தாள். அவனின் அபாய நிலையைப் பார்த்த மறுகணம் ஓடிச் சென்று கெட்டித் தரையில் நன்றாகக் கால்களை ஊன்றிக் கொண்டு வந்தியத்தேவனின் கைகளை பற்றி அவனைக் கரையில் இழுத்து விட்டாள். அப்போது வந்தியத்தேவன் இந்த மென்மையான கைகள் இத்தனை வலிமைகொண்டதா? என்று வியந்தான். 'பெண்ணே நீ இங்கு வராவிட்டால் என் வாழ்நாள் இந்த சேற்றில் புதைந்திருக்கும். என் கனவுகளும், நினைவுகளும் சேற்று வாசனையோடு கலந்திருக்கும் என் உயிர் என்னில் இருப்பதற்கு உதவி செய்த உனக்கு என் மனமார நன்றி சொல்கிறேன்' என்றான் வந்தியத்தேவன்.

அப்போது பூங்குழலி 'நன்றியை உன்னோடு வைத்துக் கொள். அதோ கடல் இருக்கிறதே சுத்தம் செய்து கொள்' என்றாள். இருவரும் கடற்கரை நோக்கி நடந்தனர் 'என்னை பேய் பிசாசு என்று நினைத்து நீ ஓட்டம் பிடித்தாய் அல்லவா?' என்றான் வந்தியத்தேவன். அவளோ 'ஆண் பிள்ளைகள் பொல்லாதவர்கள் அவர்களைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. அதிலும் உன் ஆந்தை முகத்தைப் பார்த்தால்-----' என்றாள். வந்தியத்தேவன், 'என்ன என் முகம் ஆந்தை போலவா இருக்கிறது? இந்த குரங்கு மூஞ்சியிடம் கலங்கரை விளங்கத்திற்கு வழி கேட்க வந்தேன். சரி சேந்தன் அமுதனைக் கூடவா உனக்குப் பிடிக்கவில்லை? தஞ்சாவூர் சேந்தன் அமுதனைச் சொன்னேன். உன் பெயர் பூங்குழலி என்றால் அவன் உன் அருமைக் காதலன் தானே?' என்றான்.

இதை நான் சொல்லவில்லை அவன் தான் சொன்னான். பூங்குழலி நகைப்புடன், 'அவன் இங்கு நின்றால் அவனையும் சேர்த்துக் குழியில் தள்ளியிருப்பேன். வேறு என்ன சொன்னான்' என்று வினவ, அவனும் பதில் சொல்லிக் கொண்டே கடற்கரை ஓரமாக வந்தனர். வந்தியத்தேவன் தயங்கியபடி தண்ணீரில் இறங்கினான். ஆழமில்லாத கடற்கரை என்று தெரிந்தும் தயங்கித் தயங்கி நின்று சுத்தம் செய்தான் அப்பொழுது அந்த சேற்றுக் குழி வழியில் வைத்தியர் மகன் பினகபாணி வந்தியத்தேவனின் குதிரையைப் பிடித்து இழுத்து வந்தான். இதைக் கண்ட வந்தியத்தேவன் இவனும் சேற்றுக் குழியில் அகப்படப் போகிறானே! என் குதிரையும் அல்லவா வருகிறது! என்றபடி ஓடிச் சென்று அவர்கள் சேற்று நிலத்தில் கால் வைக்காது நிறுத்திவிட்டான். பின்னர் பூங்குழலி வந்தியத்தேவனின் குதிரை மீது பிரியமாக தன் கையை வைத்தாள். குதிரையும் தன் உடலை சிலிர்த்து கனைத்தது. 'பார்த்தாயா இந்தக் குதிரையின் பண்பை? என்றான் வந்தியத்தேவன். 'ஆனால் மனிதர்களுக்கு இந்தப் பண்பு இல்லையே' என்றாள் பூங்குழலி. மனிதர்கள் யாவரும் ஒரே மாதிரி இல்லை. சேந்தன் அமுதன் நல்லவன் இங்கு வரும் வைத்தியர் மகன் நல்லவன் நானும் நல்லவன்' என்றான் வந்தியத்தேவன். மேலும், 'நாங்கள் சக்கரவர்த்தியின் நோயை குணமாக்க சில மூலிகைகள் பெற்றுக் கொள்ள இங்கு வந்தோம். இவன் தஞ்சை திரும்பி விடுவான். நான் இலங்கை போகிறேன்' என்றான். அதற்கு பூங்குழலி, 'இரண்டு நாளுக்கு முன் இரண்டு பேர் இங்கு வந்தனர். அவர்களும் இப்படித்தான் பொய் சொல்லி என் அண்ணனை அழைத்துக் கொண்டு சென்றார்கள்' என்று வருத்தப்பட்டாள். இவ்வாறு பேசிக்கொண்டு கலங்கரை விளக்கத்தின் அருகில் இருந்த தியாகவிடங்கர் வீட்டை அடைந்தனர். 'பூங்குழலியின் தந்தை இவர்களைப் பூங்குழலியுடன் பார்த்து கோபங்கொண்டு, பூங்குழலி நேற்று மூன்று பேரை மந்திரவாதி அனுப்பினார் என்று கூறி அழைத்து வந்தாய் இவர்களை ஏன் இங்கு அழைத்து வருகிறாய்?' என்றார். அதற்கு பூங்குழலி 'அப்பா இவர்கள் உங்களைத் தேடி வந்தவர்கள். வழி தெரியாது நின்றனர் அதனால் அவர்களை இங்கு அழைத்து வந்தேன்' என்றாள். அதற்கு தியாகவிடங்கர், 'தம்பி இது உண்மையா?' என்றார். உடனே வந்தியத்தேவனும் தன் அரைச் சுருளில் இருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தான். அதைப் படித்ததும் தன் மனைவியை அழைத்து, 'இளைய பிராட்டி குந்தவை ஓலை அனுப்பியுள்ளார். இவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் உன் மருமகளைச் சொல் பானையைக் கழுவி கவிழ்க்க வேண்டாம் என்று' என்றார். இரவு உணவை உண்டபின் வந்தியத்தேவன் பெரியவரிடம் 'நான் அவசரமாக இலங்கை போக வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். அதற்கு பெரியவர், 'தம்பி இந்தக் கரையோரத்தில் பல சிறிய பெரிய படகுகள் இருந்தன. எல்லாம் இலங்கையில் போர் புரியும் படைவீரர்களின் உதவிக்காக சென்றுள்ளன. இங்கு இரண்டு படகுகள் இருந்தன. அதில் ஒன்றை நேற்று வந்த மனிதன் என் மகனிற்கு நிறைய பணம் கொடுத்து அழைத்துச் சென்றான் அவர்கள் யார்? எதற்கு போகிறார்கள் என்றே தெரியவில்லை. எனக்கு மகனை அனுப்ப விருப்பம் இல்லை பணத்திற்கு ஆசைப்பட்டு என் மருமகள் என் மகனை வற்புறுத்தினாள். அவர்கள் பனை இலை இலட்சினை போட்ட மோதிரம் வைத்திருந்தார்கள். அவர்கள் பழுவேட்டரையர் ஆட்கள் என்று தெரிந்து கொண்டேன். எல்லாம் என் குடும்பத்தின் சாபக்கேடுதான் காரணம்' என்று வருத்தப்பட்டார். 'ஆம் ஐயா சேந்தன் அமுதன் எல்லாம் சொன்னான் நான் அவன் வீட்டில் தங்கியிருந்தேன்' என்றான் வந்தியத்தேவன்.

அப்பொழுது பெரியவர், 'நீதானா அந்த ஆள் நான் எல்லாவற்றையும் கேள்வியுற்றேன் அதனால் தான் நீ இலங்கை போகின்றாயா?' என்றார். அதற்கு வந்தியத்தேவன், 'இல்லை ஐயா நான் தப்பி ஓடவில்லை நான் ஒரு முக்கியமான ஓலை கொண்டு போகிறேன். நீங்கள் இதைப் படித்துப் பார்க்கலாம்' என்றான். அதற்கு பெரியவர் 'என்னுடைய ஓலையில் குந்தவை எழுதியதே போதும்' என்றபடி, 'இங்கே ஒரு படகு உண்டு உன் நண்பனும் நீயும் அதை எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் கொண்டு செல்லுங்கள்' என்றார். அதற்கு வந்தியத்தேவன், 'எனக்குத் தண்ணீரைக் கண்டால் பயம் படகும் ஓட்டத் தெரியாது அப்படித்தான் அவனுக்கும் படகு ஓட்டத்தெரியாது. வேறு யாரும் இல்லையா?' என்று கேட்டான். 'தம்பி படகு ஓட்டுவதில் மிக்க சாமர்த்தியம் கொண்டவள் என் மகள் இவள் பல தடவை இலங்கை போய் வந்திருக்கிறாள். நான் அவளிடம் கேட்டுப் பார்க்கின்றேன். இருந்தும் இது இலகுவில் நடக்கும் காரியமன்று நீயும் அவளிடம் மெல்லப் பேசிப் பார்' என்றார். பின்பு அவர் கலங்கரை விளக்கம் நோக்கி நடந்து சென்றார். வைத்தியர் மகனோ நன்றாகத் தூங்கி விட்டான். வந்தியத்தேவனும் திண்ணையில் தூங்கச் சென்றான். கண் அயரும் தருவாயில் கதவு திறக்கும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டான். இந்தப் பெண் இந்த நடு நிசியில் எங்கே போகிறாள்? இவள் பழுவேட்டரையர் ஆளாய் இருப்பாளோ? சரி என்ன செய்கிறாள் என்று பின் தொடர்ந்து பார்ப்போம். இல்லை தன் காதலர்களைப் பார்க்கப் போவேன் என்றும் சொன்னாளே! சரி சரி பின் தொடர்ந்து செல்வோம் என்று பின் தொடர்ந்தான் வந்தியத்தேவன். பூங்குழலி ஓட்டமும் நடையுமாக விரைவாகச் சென்றாள். கரிய இருளும், மரங்களும், செடிகளும் பேய் போல் காட்சி தந்தன. பூங்குழலியைத் தொடர்ந்து வந்த வந்தியத்தேவன் திடீர் என்று பூங்குழலி மறைந்துவிட்டதைக் கண்டு, 'இது என் முட்டாள் தனம் இந்த இருட்டில் காட்டில் எனக்கென்ன வேலை திரும்பப் போய்விடுவது நல்லது' என்றபடி திரும்பினான்.

(தொடரும்...)

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்:
மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

கலை வாழும் தமிழ்நாடு தலை நிமிர்ந்தால் அது உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் நன்மையாகும்!

- கனடா நக்கீரன்

பத்து ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் ஆட்சிக் கட்டில் ஏறிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எதிர்வரும் இந்திய நாட்டின் சுதந்திரத் திருநாளான ஓகஸ்ட் 15 இல் நூறு நாட்களை நிறைவு செய்கிறது.

தமிழ்நாட்டின் 16 ஆவது சட்டசபைக்கான தேர்தல் கடந்த ஏப்ரில் 6 ஆம் நாள் நடந்தது தெரிந்ததே. வாக்கு எண்ணிக்கை மே 02 ஆம் நடந்தது. மொத்தம் 234 இருக்கைகளைக் கொண்ட தமிழ்நாடு சட்ட சபையில் தனித்து 125 இருக்கைகளை (திமுக கூட்டணி 159) கைப்பற்றிய திமுக பெரும்பான்மை பலத்தோடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைத்தது. பத்தாண்டு காலமாக ஆட்சி அதிகாரத்தில் இருந்த அதிமுக 65 தொகுதிகளில் (அதிமுக கூட்டணி 75) மட்டும் வெற்றிபெற்று எதிர்க்கட்சி ஆக இருந்து வருகிறது.

தேர்தல் காலத்தில் திமுக தனது தேர்தல் அறிக்கையில் 17 முக்கிய வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அவையாவன,

(1) திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(2) "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது 100 நாட்களுக்குள் தீர்வு காண முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் தனித்துறை உருவாக்கப்படும்.

(3) அதிமுக அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும்.

(4) தமிழக சட்ட மேலவை மீண்டும் கொண்டுவரப்படும்.

(5) பொங்கல் திருநாள் மாபெரும் பண்பாட்டுத் திருநாளாக மாநிலம் முழுவதும் கொண்டாடப்படும்.

(6) சென்னையில் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் அமைக்கப்படும்.

(7) தமிழ் ஆட்சிமொழி. மத்திய அரச அலுவலங்களில் தமிழ் ஆட்சிமொழி.

(8) மூன்று ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் மின்மோட்டார் வசதியில்லாத விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வாங்கும் போது ரூபா 10,000 வரை மானியம் வழங்கப்படும்.

(9) மீனவ சமுதாயத்தை கடல்சார் பழங்குடி மக்கள் என்று பழங்குடியினர் பட்டியலில் (ST) சேர்ப்பதற்கும் பழங்குடியினருக்குள்ள அனைத்துச் சலுகைகளையும் மீனவர்கள் பெறுவதற்கும் திமுக முயற்சி செய்யும்.

(10) சட்ட மன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டும் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது. இந்தச் சட்டத்தை விரைவில் நிறைவேற்றிட வேண்டுமெனத் திமுக மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

(11) ஏழை மக்கள் படும் துயரங்களைப் போக்கும் வகையிலும் ஏழைக் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கட்டுபடியான விலையில் பால் கிடைக்கும் வண்ணம் ஆவின் பால் லிட்டருக்கு ரூபா 3 ஆகக் குறைக்கப்படும்.

(12) அனைத்துச் சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற கோட்பாட்டின் கீழ் பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கு நியமனம் வழங்கப்படும். வழிபாடு தமிழில் நடத்தப்படும்.

(13) முடக்கி வைக்கப்பட்டிருக்கும் சேது சமுத்திர திட்டம் மீண்டும் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(14) 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை மனிதாபன அடிப்படையில் விடுதலை செய்ய வலியுறுத்துவோம்.

(15) நீட் தேர்வை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் மாணவர்களின் கல்விக்கடன்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(16) கிராமத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள பெண்களுக்குத் தொழில் தொடங்க வட்டியில்லாமல் 50,000 ரூபாய் கடனாக வழங்கப்படும்.

(17) அகதி முகாமிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும்.

மொத்தம் 505 வாக்குறுதிகளை திமுக தனது தேர்தல் அறிக்கையில் (https://dmk.in/manifesto-2021) வெளியிட்டிருந்தது. தமிழக அரசின் தற்போதைய நிதி நெருக்கடிச் சூழ்நிலையில் - அரசின் கடன் ரூபா 6 இலட்சம் கோடியாகவும் பொதுத்துறை நிறுவனங்களின் கடன் ரூபா 3 இலட்சம் கோடியாகவும் உள்ள நிலையில் - இந்த வாக்குறுதிகளை முழுமையாக திமுக அரசால் நடைமுறைப்படுத்த முடியுமா என்பது கேள்விக் குறியாகும். இருந்தும் இந்த வாக்குறுதிகள் சிலவற்றை திமுக ஆட்சி நிறைவேற்றியுள்ளது. ஆவின் பால் விலை ரூபா 3 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது, "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதே போல் 1, 212 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம், கொரோனா தொற்றுப் பரவலால் ஏற்பட்ட பாதிப்பிற்கான நிவாரணமாக ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூபா 4 ஆயிரம் மற்றும் 14 பொருட்கள் அடங்கிய பொதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சை செய்யும் வகையில், "அன்னை தமிழில் அர்ச்சனை" என்ற திட்டத்தின் கீழ் ஓகஸ்ட் 5 இல் சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோவிலில் தமிழ் மொழியில் அர்ச்சனை தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 47 பெரிய கோவில்களிலும் அடுத்ததாக தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு 539 கோவில்களில் தமிழில் அர்ச்சனை விரிவுபடுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய அமைச்சர் சேகர் பாபு, முதல்வர் ஸ்டாலின் அறிவுரைப்படி தமிழில் அர்ச்சனை செய்யும் திட்டத்தை செயல்படுத்தியிருப்பதாகவும் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யும் நடைமுறையும் தொடரும் விரும்புவோர் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, "பெரும்பான்மை மக்கள் விருப்பப்பட்டால் தமிழ்நாட்டிலுள்ள அக்கோவில்களில் தமிழில் குடமுழுக்கு செய்யப்படும். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று கூறியிருக்கிறார்.

இதனிடையே, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற போது கொரோனா தொற்று திமுகவுக்கு பெரும் அறைகூவலாக இருந்தது. நாட்டையே உலுக்கி வந்த இரண்டாம் அலையில் தமிழகத்திலும் நாளாந்தம் தினசரி கொரோனா பாதிப்பானது 20,000 தாண்டியிருந்தது. சென்னையில் மட்டும் 5,000க்கும் மேற்பட்டோர் நாளாந்தம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வந்தனர். இது தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் எடுத்த தொடர்ச்சியான - கடுமையான நடவடிக்கைகளால் நாளாந்த கொரோனா தொற்று நோய் எண்ணிக்கை இப்போது 2,000க்கு கீழே குறைந்துள்ளது. சென்னையில் 180 ஆகக் குறைந்துள்ளது.

இருந்தும் திமுக ஆட்சியைக் குறைசொல்வோரும் இருக்கவே செய்கிறார்கள். ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு இரத்து செய்யப்படும் பெட்ரோல் விலை ரூபா 5 ஆகவும் டீசல் விலை ரூபா 4 ஆகவும் சமையல் எண்ணெய்க்கு ரூபா 100 மானியம், குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூபா 1,000 உதவித் தொகை போன்ற தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு தற்போது திமுக மௌனம் காக்கிறது என அதிமுக குற்றம் சாட்டுகிறது. குற்றம் சாட்டுவதோடு நில்லாமல் கடந்த யூலை 26 இல் தமிழகம் தமிழகம் முழுதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறது.

எதிர்வரும் 13 ஆம் நாள் திமுக அரசு தமிழக வரவு - செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்கிறது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பல்வேறு அம்சங்கள் இடம் பெற வாய்ப்பு உள்ளன. என்றாலும் 5 விடயங்களில் முக்கியத்துவம் பெறும் என்கிறார்கள்.

போக்குவரத்து ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டம், மாதந்தோறும் மின் கட்டணம் செலுத்தும் முறை, முதியோர் உதவித்தொகை 1,500 ரூபாயாக உயர்வு, வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 40 விழுக்காடு அதிகரிப்பு, நகராட்சிகள், மாநகராட்சிகளாக தரம் உயர்வு உள்ளிட்ட 5 விடயங்கள் இடம் பெற வாய்ப்பு உள்ளது என்கிறார்கள். முதலமைச்சர் ஸ்டாலின் தேர்தலில் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

SENIOR TAMILS' SOCIETY OF PEEL

பீல் தமிழ் முதியோர் சங்கம்

Not profit Registration # 1406004 (Established in 2000)

Dear Members of Senior Tamils Society of Peel Date: July 27, 2021

Annual General Meeting 2021

We cordially invite all the Members in good standing for the Annual General Meeting to be held on August 21,2021 at 9:30 am at ***Mississauga Valley Community Centre, 1275 Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8 at 9:30 am, in the Taylor Room on upper floor.***

Also, we invite proposed resolutions from members in good standing on or before August 13, 2021. Please ensure the proposed resolutions are received by STSP office latest by 1:00 pm on or before August 13, 2021.

Please refer the agenda below.

9:30 am	Registration of participants – Members in good standing
10:00 am	National Anthem, STSP song, & Tamil Thai Vanakam
10:15 am	One minute silence for National Heroes
10:20 am	President's address
10:45 am	Minutes of AGM held on October 2021
11:00 am	Annual report of the Secretary
11:20 am	Presentation of Annual Financial Statement
	Please refer it on Muthuvenil 2021 (pages 31-35)
11:45 am	Introduction of new Board of directors
12:00 pm	Discussion on newly proposed resolutions if any and approval by voting if required
12:15 pm	Release of Seniors Resource Book
12:30 pm	AOB
01:00 pm	Lunch

Nadarajah Moorthy Aru Moorthy

Secretary President

250 Dundas Street West, Unit 206, Mississauga, Ontario, L5B 1J2
☎: 905-290-3000💻: info@ peeltamilseniors.ca
Visit us at www.peeltamilseniors.ca

இவ்வார ராசிபலன்

13-08-2021 வெள்ளி தொடக்கம் 19-08-2021 வியாழன் வரையும்

மேஷம்: வெளியூர் பயணத்தால் வெகுமதி கிடைக்கக்கூடிய வாரம். சோதனைகள் நீங்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை மாற்றம் தரும். வாழ்வு நிலை உயரும். மனைவி சலசலப்பு ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவால் பணவிரயம் ஏற்படும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். வசதிகள் கூடும். உடல் ஆரோக்கியம் குறையும். மனவேதனை குறையும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதாள பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

ரிஷபம்: அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உடல் நிலையில் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்து கொள்வீர்கள். புதுத் தொழிலை ஆரம்பிக்க முன்வருவீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்து கொள்வீர். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லாத பயங்கள் நீங்கும். மனதைரியம் கூடும். உற்சாகம் கூடும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர லட்சுமி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V

மிதுனம்: அஷ்ட ஐஸ்வர்யங்கள் சேரக்கூடிய அற்புதமான வாரம். ஆக்கப் பூர்வமான நாள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. மங்கல செய்தி வரும். முயற்சி பலன் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 9,4,8,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R

கடகம்: மறுப்பே இல்லாத மாற்றங்கள் கிடைக்கக்கூடிய மகத்தான வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

சிம்மம்: தார்மீக எண்ணங்கள் உதயமாக கூடிய உன்னதமான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத் தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும. இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

கன்னி: ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X

துலாம்: சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் கிடைக்கக்கூடிய வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோ'ம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K

விருச்சிகம்: பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாக செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமபிரான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377

தனுசு: பணிவான பேச்சுக்களால் பணவரவை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U

மகரம்: தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நடராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R

கும்பம்: போட்டி, பொறாமைகள் மறையக்கூடிய மகத்தான வாரம். நன்மைகள் பெருகும் நாள். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் கூடும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் மறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J

மீனம்: பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத் தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும. இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004

நல்லூர் கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

12.08.2021 வியாழன் முதல் 08.09.2021 புதன்கிழமை வரை

குகனேய அடியார்களே !
நிகழும் மங்களகரமான பிலவ வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப் ' பெற்று வாழ்வீர்களாக.

காலை DAY TIME

காலை 07:00 மணி	திருவனந்தல்	1ST Pooja	7:00 AM
காலை 10:00 மணி	காலசந்தி	2nd Pooja	10:00 AM
காலை 10:30 மணி	கும்ப பூஜை	Kumba pooja	10:30 AM
பகல் 12:00 மணி	விசேட பூஜை	3rd Pooja	12:00 PM
பகல் 12:20 மணி	வசந்த மண்டப்பூஜை	Vasantha Mandapa Pooja	
பகல் 01:00 மணி	அன்னதானம் வழங்கப்படும்.	Annathanam Distribution	

மாலை NIGHT TIME

மாலை 5:30 மணி	சாயரட்சை	1st Pooja	5:30 PM
மாலை 6:30 மணி	கும்ப பூஜை	Kumba pooja	6:30 pm
மாலை 7:30 மணி	மூலஸ்தானபூசை	Main Pooja	7:30 Pm
இரவு 7:50 மணி	வசந்த மண்டப்பூஜை	Vasantha Mandapa Pooja	7:50 Pm
இரவு 8:10 மணி	சுவாமி உள்வீதி வலம்	Sri Murugan Procession	8:10 pm

05.09.2021 ஞாயிறுக்கிழமை தேர்த்திருவிழா

காலை	6:00 மணி	மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை	7:00 மணி	மூலஸ்தானபூசை
காலை	8:00 மணி	வசந்தமண்டப்பூசை
காலை	09:00 மணி	தேர்பூப்பாடுதல்
காலை	10:00 மணி	இருப்பிடம்சேர்தல்
பகல்	12:50 மணி	பச்சைசாற்றுதல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்(முகார்ச்சனை),அன்னதானம் வழங்கல்

- பகல்,இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர்
- அரகல்மிர் விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர்
- கற்பூரச்சட்டி,காவடிபோன்றேர்த்திக்கடன் செய்யவுள்ளோர்
- தேர்த்திருவிழா அன்று ஆறுமாப்பெருமானுக்கு108பால்குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குட அபிசேகத்தில் கலந்கொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

திகதி	கிழமை	நாள்	விசேட திருவிழாக்கள்
12.08.21	வியாழன்	00	கணபதிஹோமம் (காலை)
13.08.21	வெள்ளி	01	கொடியேற்றம்
14.08.21	சனி	02	
15.08.21	ஞாயிறு	03	
16.08.21	திங்கள்	04	
17.08.21	செவ்வாய்	05	
18.08.21	புதன்	06	
19.08.21	வியாழன்	07	பிரதோசம்
20.08.21	வெள்ளி	08	வரலஸ்மி விளக்குப்பூஜை.
21.08.21	சனி	09	
22.08.21	ஞாயிறு	10	மஞ்சம்.
23.08.21	திங்கள்	11	
24.08.21	செவ்வாய்	12	
25.08.21	புதன்	13	சங்கடஹரசதுர்த்தி
26.08.21	வியாழன்	14	
27.08.21	வெள்ளி	15	
28.08.21	சனி	16	அருணகிரிநாதர் உற்சவம்
29.08.21	ஞாயிறு	17	கிருஷ்ணஜெயந்தி திருவிழா கார்த்திகை கற்பூரத்திருவிழா
30.08.21	திங்கள்	18	
31.08.21	செவ்வாய்	19	சூரியோற்சவம்
01.09.21	புதன்	20	சந்தானகோபாலன் திருவிழா
02.09.21	வியாழன்	21	கஜவல்லி மஹாவல்லி திருவிழா
03.09.21	வெள்ளி	22	மாம்பழத் திருவிழா,
04.09.21	சனி	23	சப்பறம், சனிப்பிரதோசம்
05.09.21	ஞாயிறு	24	தேர் திருவிழா
06.09.21	திங்கள்	25	தீர்த்த உற்சவம்
07.09.21	செவ்வாய்	26	பூங்காவனம்
08.09.21	புதன்	27	வைரவர் உற்சவம்

PLEASE WASH YOUR HANDS AND WEAR MASKS IN THE TEMPLE WHILE ALSO PRACTICING SOCIAL DISTANCING

முக்கிய அறிவித்தல்

ஆலயத்தினுள் அனைவரும் முககவசம் அணிந்தும் சமுக இடைவெளியை பேனவும்

அஷ்டோத்தர (108) சங்கு திருமஞ்சன சகிதம் ஸ்கந்தமஹா வேள்விபெருவிழாவுடன் ஏகதின லட்ச்சநாம ஐபபூசை

முருகன் அடியார்களே!
கனடா ரொறன்ரோவில் ஸ்காபுரோ நக்கர் வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வரும் எம்பெருமான் கந்தவேல் பெருமானார்க்கு நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீ சார்வாரி வருசம் தெட்சனாய வருசருது ஆவணிபரட்டாதி மாதம் 01நாள் 17.07.2021 வெள்ளிக்கிழமை முதல் 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை வரையான முன்று தினங்கள் சங்காபிசேகம்.அர்ச்சனை ,ஹோமம்.தர்ப்பணம் என்பன மிகசிறப்பு வைபமாக நடைபெற இருப்பதால் அடியார்கள் விழாவில் கலந்து கொண்டு உபயங்களை முன் வந்து ஏற்று நடாத்தி சன்முகப்பெருமானின் பரிபூரணமான திருவருள் பெறவேண்டுமாய் முருகன் திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.
பலன்கள்:– ஏகதினலட்ச்சார்ச்சனை,ஹோமம்.தர்ப்பணம்என்பனவற்றில் பங்குகொண்டால் தீர்க்க-ஆயுள் ,யமபயம், திருமணநிறைவு,தொழில்விருத்தி, வியாபாரஅபிவிருத்தி ,பணவரவு,கல்வி-அபிவிருத்தி,தோம்தீர்ந்திட., பிதிர்தோஷம், குடும்பவாழ்வுசிறக்க,காரியம்நிறைவடைட,கஷ்டம் என்பன நிகழும்

தொலைபேசி இல–416–293–9004

(19ம் பக்கத் தொடர்ச்சி)

கலை வாழும் தமிழ்நாடு தலை நிமிர்ந்தால் அது உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் நன்மையாகும்!

- கனடா நக்கீரன்

உள்ளாட்சி தேர்தல் தேதி நெருங்கி வரும் இந்தச் சூழலில் தேர்தல் வாக்குறுதிகளில் குறிப்பிட்ட முக்கியமானவற்றை வரவு - செலவுத் திட்டத்தில் அறிவித்திட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார் ஸ்டாலின். இம்முறை பொது வரவு - செலவுத் திட்டம், வேளாண் வரவு - செலவு திட்டம் என இரண்டு திட்டங்கள் தாக்கல் செய்யப்படவுள்ளது,

நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பொது வரவு - செலவுத் திட்டத்தை தாக்கல் செய்கிறார். வேளாண் துறைக்கான வரவு - செலவு திட்டத்தை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்ய உள்ளார்.

முதியோர் உதவித்தொகை போக்குவரத்து ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டம், மாதந்தோறும் மின் கட்டணம் செலுத்தும் முறை, முதியோர் உதவித்தொகையை ரூபா 1,500 உயர்த்துவது, வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 40 விழுக்காடு, நகராட்சிகள், மாநகராட்சிகளாக தரம் உயர்த்தல், சென்னை ஆறுகளைத் தூய்மைப்படுத்தல், மக்களைத்தேடி மருத்துவம், அரசு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி, அரசுக் கல்வி வளாகங்களில் வை.ஃபை வசதி, 100 நாள் வேலைத்திட்டம் 150 நாட்களாக அதிகரிக்கப்பது, சென்னை செம்மொழி பூங்காவிற்கு புத்துயிர் அளிப்பது, கலைஞர் கருணாநிதியின் நினைவாக திருச்சியில் ரூபா 70 கோடியில் உலகத் தரம் வாய்ந்த நூலகம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்டாலின் தனது நீண்ட அரசியல் பயணத்தில் முதல்வராக பதவியேற்று இருப்பது இந்த ஆண்டுதான். இதற்கு முன்னர் சட்ட சபை உறுப்பினராக, உள்ளாட்சி அமைச்சராக, துணை முதல்வராக, இருமுறை சென்னை மாநகராட்சி மேயராக, கட்சியின் மாநில இளைஞரணிச் செயலாளராக இருந்திருக்கிறார்.

இன்று முதலமைச்சராக கலைஞர் கருணாநிதியை விஞ்சும் வண்ணம் ஆட்சி செய்கிறார். தந்தையின் காலத்தைச் சேர்ந்த மூத்த தலைவர்கள், தனது சமகாலத்தவர்கள், உதயநிதியின் வயதொத்த இளைஞர்கள் என்று மூன்று தலைமுறைகளை இணைக்கும் தலைவராக அவர் இருக்கிறார். கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான துரைமுருகனுக்கு மட்டுமல்ல, இளைஞர்களான மருத்துவர் எழிலனுக்கும் வழக்கறிஞர் பரந்தாமனுக்கும்கூட தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு அளித்திருக்கிறார். ஏறக்குறைய ஐம்பது ஆண்டு காலம் நாள்தோறும் பல நூறு பேரைச் சந்தித்த வண்ணம் இருக்கிறார். யார் மீதும் அவர் சுடுசொல் வீசியதாகவோ சினந்து பேசிக் கொண்டதாகவோ செய்திகள் இல்லை. அவரது கைகளும் தூய்மையானவை.

முதலமைச்சர் ஸ்டாலின் தமிழ்நாட்டில் பொன்னாடை போர்த்தி வரவேற்கும் திராவிட இயக்க மரபுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். பொன்னாடைகளையும் பூங்கொத்துகளையும் தவிர்த்துப் புத்தகங்களைப் பரிசளியுங்கள் என்று 5 ஆண்டுகளுக்கு முன்பு அவர் விடுத்த வேண்டுகோளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி இது. ஒரு காலத்தில் சமூகத்தில் ஒரு பிரிவினர் தோளில் துண்டு போட உரிமை மறுக்கப்பட்ட காலத்தில் பொன்னாடை அணிவிக்கும் வழக்கம் ஒரு பண்பாட்டுப் புரட்சியாகக் கருதப்பட்டது.

முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கும்போது தானும் புத்தகங்களை பரிசளிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார். தமிழக முதல்வர். டெல்லி பயணங்களில் பிரதமர், ஆட்சித்தலைவர் போன்றவர்களுக்கு பரிசளித்த புத்தகங்கள் முக்கிய பேசுபொருளாயிருக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது "செம்மொழிச் சிற்பிகள்" நூலையும் சோனியா காந்தியைச் சந்தித்தபோது ஆர். பாலகிருஷ்ணனின் 'Journey of a Civilization: Indus to Vaigai' நூலையும் பரிசளித்தார். டெல்லிக்குச் சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோது ஓவியர் மனோகர் தேவதாஸின் 'Multiple Facets Of My Madurai' (Illustrated) நூலைப் பரிசளித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள சென்னை வந்த குடியரசுத் தலைவருக்கு திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் சி.சு.செல்லப்பா, தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன், இராஜம் கிருஷ்ணன், நீல. பத்மநாபன் ஆகியோரின் நாவல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அடங்கிய புத்தகப் பேழையைப் பரிசளித்தார். கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட நூல்கள் என்ற போதிலும் கட்சி பேதம் பாராட்டாத முதல்வரின் பெருந்தன்மை பாராட்டத்தக்கது.

கலைஞர் கருணாநிதிக்கு இருந்த பேச்சாற்றல், எழுத்தாற்றல், இலக்கியப் புலமை ஸ்டாலினுக்கு இல்லை. சேரும்போது அளந்து பேசுகிறார். தனக்கு வாலாயமான தமிழில் பேசுகிறார். பெரும்பாலும் குறிப்புகளை கையில் வைத்துக் கொண்டு அவற்றைப் பார்த்துக் கொண்டு பேசுகிறார். ஆனால் தந்தையைப் போலவே கடுமையாக உழைக்கிறார். தனது கடமைகளைச் செய்ய நிறைய நேரத்தைச் செலவிடுகிறார். தனக்கு நம்பிக்கையான ஐஏஸ் அதிகாரிகளை பொருத்தமான இடங்களில் அமர்த்தியிருக்கிறார். இதில் அனேகர் பெண் அதிகாரிகள். அகவையில் குறைந்தவர்கள். எல்லோரிடத்திலும் கருத்துக் கேட்கிறார். கலந்தாலோசிக்கிறார்.

தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நிதி நிலையைச் சீரமைக்கவும் ஐந்து பேர் அடங்கிய பொருளாதார ஆலோசனைக் குழு சமூகநீதி, உற்பத்தி மேம்பாடு, புதிய திட்டங்கள் தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஆலோசனை வழங்கயிருக்கிறது. இந்தக் குழுவுக்கு உலக பொருளாதார இயக்கமான IMF இல் மிகக்குறைந்த வயதில் தலைமை பொருளாதார நிபுணராக பணியாற்றியவரும் இந்திய மத்திய வங்கியின் ஆணையாளராக இருந்த இரகுராம் இராசன் தலைமை தாங்குகிறார்.

எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்துகிறார். இதனால் இந்தியாவின் முதலமைச்சர் பட்டியலில் ஸ்டாலின் முதல் இடத்தைப் பிடித்துள்ளார் என ஊடகங்கள் சிலாகித்து எழுதுகின்றன.

முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் ஒரு பொற்கால தமிழகம் மலர வேண்டும். கலை வாழும் தமிழ்நாடு தலை நிமிர்ந்தால் அது உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் நன்மையாக இருக்கும்.

MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

ஈழத்துத் திருக்கோவில்கள் 960

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
முல்லைத்தீவு

சிலாவத்தைக் கடற்கரையிலுள்ள கோவிலில் பூசை வழிபாடுகள் நடைபெற்ற பின், மீண்டும் தீர்தக்குடத்தைத் தோளில் வைத்துத் தீர்த்தப்பவனி ஆரம்பமாகும். இப்பவனி சிலாவத்தைக் கிராமத்திற்குள் வரும் வழியெங்கும், மகர தோரணமிட்டு, அலங்கரித்து, பந்தல்கள் அமைத்து, நிறைகுடம் வைத்துத் தேங்காய் உடைத்துத் தீர்த்தக்குடத்தை வரவேற்பர். இங்கிருந்து சிலாவத்தைக் கண்ணகி கோவிலுக்குச் சென்று, இங்கும் பூசை வழிபாடுகள் நடைபெறும். மீண்டும் பவனி ஆரம்பித்துக் காட்டாவிநாயகர் கோவிலை இறுதியில் சென்றடையும். வழியெங்கும் வரவேற்புக்கள் வழங்கப்படுவதோடு, செல்லும் வழியிலுள்ள ஊற்றங்கரை ஆலயத்தில், மிகப் பெரிய வரவேற்பு அளிக்கப்படும். இவ்வாறு பவனியாகக் கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தில் விளக்கேற்றும் வைபவம் இடம்பெறும். தீர்த்தக்குடத்திலிருக்கும் தீர்த்தம், சிறிய புதிய மண்பானையில் வார்க்கப்பட்டு, அதன் வாய்பகுதி வெள்ளைத் துணியால் கட்டப்பட்டு, மத்தியில் துவாரம் இடப்படும். அத் துவாரத்தினூடாகத் திரியிட்டுத் தீபம் ஏற்றப்படும். தீர்த்தத்தில் விளக்கேற்றப்படும் வைபவம் அடுத்த ஞாயிறுவரை ஒரு வார காலத்திற்கு இடம்பெறும். ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து மீதித் தீர்த்தத்தை நடைபவனியாக, வற்றாப்பளைக் கண்ணகிஅம்மன் ஆலயத்திற்குக் கொண்டுவருவர். வற்றாப்பளைக் கண்ணகிஅம்மன் கோவிலில், மீதித்தீர்த்தத்தில் விளக்கேற்றும் வைபவம் நடைபெறும்.

கடல் நீரில் தீபம் ஏற்ற முடியுமா? எனக் கேள்வி எழுப்பியோர், இச்செயலை நம்ப மறுத்தனர். எனவே இச் செயலை விஞ்ஞானரீதியாகப் பரீட்சித்துப் பார்க்க முயன்றனர். இவ்வாறன ஆய்வுகள் பல தடவைகள் நடைபெற்றது. 1964 ஆம் ஆண்டு கொழும்பி லிருந்து வந்த ஆய்வாளர்கள், தீர்த்தத்தில் தீபம் எரிவதைப்பற்றி ஆய்வு செய்தனர். எனினும் எவ்வித முடிவும் கண்டறியப்படாது திரும்பினர். மீண்டும், 1970 ஆம் ஆண்டிலும் இவ்வாறான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள், கடல்நீரிலே காணப்படும் உப்புக் கரைசல். தீபத்தை ஏற்றும்போது நெருப்பு எரியக்கூடிய ஒரு பொருளாக மாறுகின்றது எனப் பொருந்தாத, ஆதாரமற்ற கருத்தை முன்வைத்தனர். இக்கருத்தை ஆய்வுபூர்வமான முடிவாக எவரும் ஏற்கவில்லை. இன்றுவரை தீர்த்தநீரிலே தீபமேற்றுவது பற்றிய விளக்கத்தை, எந்த விஞ்ஞானிகளாலும் கொடுக்க முடியவில்லை. அறிவுக்கும், மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட அற்புதமென்றே இதனைக் கொள்ளமுடியும்.

வைகாசி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கலாகும். இத் திங்கள் இரவு வளந்து நேருதல் என்னும் நிகழ்வு நடைபெறும். பூசாரியார் வளந்து (பானை) ஏந்தி ஆடுவார். ஆட்டத்தின் உச்சக்கட்டத்தில் வளந்தினை எறிந்து ஏந்துவார். இறுதியில் நிலத்தில் பள்ளமாக வெட்டி அமைக்கப்பட்ட அடுப்பில் வளந்தினை வைப்பர். பின் பொங்கலிடும் அரிசியை ஏந்தி ஆடுவார். ஏந்தியாடும் அரிசியையும் அள்ளி மேலே எறிவார். இவ்வரிசிகள் நிலத்தில் விழுவதில்லை. அத்தோடு வளந்துப்பானையில் சூத்திரதாரணம் செய்யப்பட்டு, பானையின் கழுத்தில் வெற்றிலை கட்டப்பட்டிருக்கும். இவைகள் பெருநெருப்பிலும் எரிந்து சாம்பராகாது, கட்டியபடியே காணப்படுவது மிக அதிசயமானது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் காலத்திலே, பூசாரியாருக்கு உதவிசெய்வோரை, நோற்புக்காரர்கள் என அழைப்பர். இவர்களைக் கோவிற்பிள்ளைகள் எனவும் அழைப்பர். இவர்கள் கோவிலோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவும், கண்ணகி அம்மன் பக்தர்களாகவும் காணப்படுவர். இவர்கள் கோவில் மூலத்தானத்திற்குள் செல்லாது மண்டபத்தில் இருந்து சகல உதவிகளையும் செய்வர். சிலாவத்தைக் கடற்கரையிலிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு, காட்டாவிநாயகர் ஆலயத்தில் தீபம் ஏற்றப்பட்டதும், கண்ணகியின் சிலம்புகூறல் ஏட்டினை, இங்கேயே வாசிக்க ஆரம்பிப்பர். இக் கோவிலில் பொங்கல் நடைபெறுங்காலத்தில், சிலம்பு கூறல் படலம், ஏட்டிலிருந்து வாசிக்கப்படும். இக்காவியத்திலே கண்ணகி கோவலன் கதை, பாண்டிய மன்னன் சபையில் வழக்குரைத்தல், கண்ணகி மதுரையை எரித்தல், மதுரையை விட்டு வெளியேறி இலங்கைக்கு வருதல், இலங்கையின் பல இடங்களிலும் தங்கியிருந்து பின் பத்தாம்பளையை அடைதல், பத்தாம்பளையில் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறும். இங்கு திங்கட்கிழமை அதிகாலைவரை வாசிக்கப்பட்டு, மீதியை வற்றாப்பளைப் பொங்கல் தினத்தன்று, வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலிலேயே வாசித்து முடிப்பர்.

சிலம்பு கூறல் ஏடு வாசிப்பதைக் கேட்கச் சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்தும், பெருந்திரளான மக்கள் கூடுவர். வைகாசிப் பொங்கலோடு, பங்குனியிலே வருகின்ற திங்கட்கிழமைகள் யாவும், கண்ணகை அம்மனுக்குரிய சிறப்பு நாட்களாகும். எனினும் இவற்றுள் பங்குனிக் கடைசித்திங்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். பொங்கல் காலத்திலே பக்தர்களை நோய், பிணி அணுகாமல் இருக்க, பரிலயம் கட்டுதல் என்னும் நிகழ்வு நடைபெறும். பரிலயம் என்பது பரிவாரப்பேய் அல்லது பேய்பிசாசைக் குறிக்கும் சொல். இன்றும் கிராமப்பகுதிகளில் ஒருவருடைய பிடிக்காத செயலைக் குறிக்க "பரிகலப்பேய் மாதிரி", என்ற சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல்லே நாளடைவில் பரிலயம் என மருவியிருக்க வேண்டும். திருவிழாக்காலங்களில் பக்தர்களுக்குத் தீயவற்றால் துன்பம் நேராதிருக்க, கொடியேற்றத்திற்கு முன் இவற்றைக் கட்டிப்போடுவதான சம்பிரதாயம் நிகழ்வதுண்டு. அவ்வாறே திருவிழா நடைபெற்ற பின்னர் இவற்றிற்குரிய காப்பை நீக்கிவிடுவர். இவ்வாறான ஒரு சம்பிரதாயமே, பரிலயம் என வற்றாப்பளைக் கண்ணகிகோவிலிலும் நடைபெறுகின்றது.

வளரும்...

பந்துதைத்தும் தோற்காத அபின்சன் பாதியிலே தோற்றானே!



செல்வன். அபின்சன் வேலாயுதம்

(மொன்றியால் - கனடா)

அர்ஜ்சுனன் சுபத்திரை வயிற்றுதித்து
கர்ஜ்ஜிக்கும் சிங்கமென வந்தவனாம் - நாம்
அர்ஜ்ஜிக்கும் பாரதப் புகழ் மைந்தன்
'அபிமன்யு' திருமுகத்தை நினைவூட்டும்
சில்லாலை தந்த சிற்ப மைந்தன்
வேலாயுதன், சுமதி தம்பதிகள்
தவமைந்தன் 'அபின்சன்
புவிமீது புகழுடைத்த இளவலாக?
வலம் வந்த காலங்கள்
நிலமிசை நீடுபுகழ் நிலைத்திருக்கும் காலமன்றோ!
'ஏன் பிறந்தாய் மகனே?', என
அவலச்சுவை மேலிடவே'
ஆராரோ தாலாட்டுப் பாடாமல்
'வாராது வந்த மாமணியே! மரகதப் புதையலே,
மாணிக்கப் புதல்வனே! மாதவத்தால்
மகேசன் மனமகிழ்ந்து வரம் தரவே
வந்துதித்த மார்க்கண்டேயனே!',
சந்ததிக்குச் சந்தோஷம் தரவைத்த
சற்குணசீலனே! சந்திரபிம்பமே!
தாலேலோ.. தாலேலோ... எனப்
பாட்டிசைத்துப் பரவசம் கொள்ள
வைத்தவனை வானுலகம் அவசரமாய் அழைத்ததேனோ!

அபி.. அபி.. எனப் பாசக் குரலெழுப்பும்
அண்ணன் தங்கை மௌனத்தில் மூழ்கிவிட
உதை பந்துக் தோழர்கள் ஆட்டத்தை நிறுத்திவிட
சோடிழந்த பறவையென அமெரிக்கத் தொழில் முனைவோர்,
உனை பிரிந்து சோகத்தில் முடங்கி விட,
இமைப்பொழுதும் பிரியாது செல்லமென
வாலைக் குழைத்து வரும் நன்றியுள்ள நண்பனை
பிரிவுத் துயரில் ஆழ்த்தி விட
வேகமாய் விரைந்தோடி
தேவியொரு பாகமெனக்
காட்சி தரும் சிவசக்தி
மைந்ததாக தேவன்
திருவடியில் சரணடைந்தாய்!

'அபி'மன்னன் போர்களத்தில் தோற்கவில்லை
ஆடுகளப் பந்துதைத்தும் தோற்கவில்லை,
மனக் களத்தில் வீரமொடு விவாதித்து
விடையேறும் பெருமானைக் காண்பதற்கு
விடைபெற்றுப் போனவனின் புகழ் வாழ்க!

இங்ஙனம்,
கண்ணீரில் மூழ்கியுள்ள
நண்பர்கள், உறவினர்கள் மற்றும்
விளையாட்டு மைதானத் தோழர்கள்

Carefirst Family Health Team

புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

Clinic Location:

Carefirst One-Stop Multi Services Centre

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE · TRANSMISSION · RUSTPROOFING · OILCHANGE · TYRES · AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1323 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 13, 2021

கனடிய பெரும் நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களுக்கான வரி அதிகரிக்கப்படும் என்கிறார் என்டிபி கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங்

பணக்காரர்களை 'குறி' வைத்து சாதாரண கனடியர்களுக்கு உதவுவதே தனது நோக்கம் என்கிறது தேசிய புதிய ஜனநாயகக் கட்சி

கனடாவில் அடுத்த பொதுத் தேர்தல் எப்போது நடைபெற்றாலும், அதில் பணக்காரர்களை குறி வைத்தே தமது கட்சி கொள்கைகளையும் பொருளாதார மற்றும் வரி தொடர்பான திட்டங்களை வகுக்கும் என்றும் அவற்றையே எமது தேர்தல் பிரச்சாரங்களில் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் சாதாரண கடியர்களுக்கு தெரிவிப்போம் என்றும் தேசிய மட்டத்திலான என்டிபி என்னும் புதிய ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை அடுத்த பொதுத் தேர்தலுக்கு கட்சி தயாராகும் போது, வழமையான பிரச்சார யுக்தியிலிருந்து விலகி சாதாரண மக்களின் நலன் கருதி, மனநல சுகாதார சிகிச்சை, மருத்துவம் மற்றும் அதிக விலையுயர்ந்த திட்டங்களை உள்ளடக்கிய உலக-ளாவிய சுகாதார சேவையை விரிவுபடுத்தவுள்ளதாகவும் மேற்படி என்டிபி அறிவித்துள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

தனது பிறப்பிலிருந்தே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருந்தவர் அமரர் கலாநிதி வசந்தகுமார் அவர்கள்

NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL AND TECHNOLOGY நிர்வாகத்தினர் நடத்திய அஞ்சலி நிகழ்வில் வி. துரைராஜா புகழாரம்

"கனடாவில் அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற அமரர் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்கள் பல்வேறு நற்பண்புகள் நிறைந்தவர். அவரது துறை சார்ந்த அறிவு மற்றும் பட்டங்கள் ஆகியவற்றை ஒரு புறத்தே வைத்து விட்டு மிகுந்த மனிதநேயம் கொண்டவராக அவர் தனது கனடிய வாழ்வை மேற்கொண்டார். எப்போதும் யாருக்காவது உதவிடவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியுமே அவரது எண்ணங்களின் ஓட்டம் இருந்தது.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

கனடா உதயன்-வெள்ளிவிழா ஆண்டு சிறப்பிதழ் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது

கனடா உதயன்-பத்திரிகை கடந்த 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சேற்றிய வெள்ளிவிழா ஆண்டு சிறப்பிதழ் கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஆலயத்தின் பிரதம குரு பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது உப சிவாச்சாரியார்கள் சகிதம் மிகுந்த சிரத்தையோடு செய்திருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

கனடா- ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்த்தானத்தின் இரதோற்சவம் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது

கனடா-ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்த்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் கடந்த திங்கட்கிழமை காலை தொடக்கம் மதியம் வரை நடைபெற்றது.

வருடா வருடம் வெளிவீதி வலம் வந்து, வெகு சிறப்பாக நடைபெறும் இரதோற்சவம் இவ்வருடம் உள்வீதியில் மூன்று சிறிய இரதங்கள், விநாயகர், முருகன், அம்பாள் ஆகியவர்களுக் குரியவையாய் வலம் வந்தன.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

கொரோனா தொற்று நெருக்கடியில் நல்லூர்க் கந்தன் உற்சவத்தில் எமது நடவடிக்கைகள் தொடர்பாக நாம் வருந்துகின்றோம்

யாழ்ப்பாண நகர பிதா மணிவண்ணன் அறிவிப்பு

தற்போதைய கொரோனா தொற்று தொடர்பான நெருக்கடியான காலப்பகுதியில் எமது யாழ்ப்பாண மாநகர சபையினால் எடுக்கப்பெற்றுள்ள விசேட நடவடிக்கைகளினால் நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்திற்கு வரும் பக்தர்களுக்கு மிகுந்த அசௌகரியங்கள் ஏற்படும் என்பதை நாம் உணர்கின்றோம். எனினும் காலத்தின் தேவை கருதி, அவற்றை பொறுத்தருளுமாறும் நாம் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண மாநகர சபையின் தற்போதைய நகரபிதா மணிவண்ணன் அவர்கள். அவர் வெளிநாட்டு உள்நாட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய வாரத்திற்கு $50 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 416-752-1524